வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 09.01.2023 திங்கட்கிழமை இதழ் : 31 பக்கங்கள் : 16



# கூட்டமைப்பில் புதிய கட்சிகளை உள்வாங்குவோம்!

## ரெலோ கட்சி அறிவிப்பு

- ஒரு கட்சி தீர்மானம் கூட்டமைப்பை பாதிக்காது
- தேவையேற்படின் பொதுச் சின்னத்தில் போட்டி

யாழ்ப்பாணம், ஜனவரி 09

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் புதிய கட்சிகளை உள்வாங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம். ஒரு கட்சியால் எடுக்கப்படும் தீர்மானங்கள் எந்தவிதத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இருப்புக்கு பிரச்னையை ஏற்படுத்தாது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தெரிவித்துள்ளது. 15

## காணி விடுவிப்பு: இராணுவம் பின்னடிப்பு!

மட்டக்களப்பு, ஜன. 09

“காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுக்கும் பணிப்புரைகளைச் செயலபடுத்துவதற்கு இராணுவத் தரப்பு தயக்கம் காட்டி வருகின்றது” - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயல் குழுக் கூட்டம் மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இடம்பெறும் பேச்சு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மேலும், “ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறும் விடயங்களை அதிகாரிகள் நடைமுறைப்படுத்தப் பின்னடிக்கின்றார்கள். குறிப்பாகக் காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுக்கும் 15

## தேர்தலை பிற்போடுமாறு ஒருபோதும் கோரவில்லை!

*7 கண்காணிப்பு அமைப்புகள் அறிக்கை*

கொழும்பு, ஜன. 09

உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போடுமாறு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் கோரிக்கை விடுத்திருப்பதாக தெரிவிப்பதற்கு சிலர் முயற்சித்து வருகின்றனர். நாட்டில் செயல்பட்டு 15

## தாதியர்கள் வியாழனன்று தொழில்சங்க போராட்டம்!

கொழும்பு, ஜன. 09

தாதியர் சேவையில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு அரசாங்கம் மற்றும் சுகாதார அமைச்சு செயல்படாததற்கு 15

## ஆசியாவில் பயணம் செய்ய சிறந்த இடமாக யாழ்ப்பாணம்!

பட்டியலிட்டது சி. என். என். செய்தி சேவை!



நியூயோர்க், ஜன. 09

ஆசியாவில் உல்லாசப் பயணம் செய்வதற்கு 18 சிறந்த இடங்களில் ஒன்றாக யாழ்ப்பாணத்தை அடையாளப்படுத்தியுள்ளது அமெரிக்காவின் பிரபல தொலைக்காட்சியான சி. என். என். 15

## தேசிய இனப் பிரச்னைக்கான தீர்வு:

## மலையக கட்சிகளுடன் பேசினாலே சர்வகட்சி கூட்டத்தில் பங்கேற்போம்!

*மனோ கணேசன் மீண்டும் திட்டவட்டம்!*



நுவரெலியா, ஜன. 09

“தேசிய இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு திட்டம் சம்பந்தமாக மலையக கட்சிகளுடனும் ஜனாதிபதி பேச்சு நடத்த வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் சர்வக்கட்சி மாநாட்டை தமிழ் முற்போக்கு கூட்டணி புறக்கணிக்கும்.” - என்று தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார். 15

## “தேர்தலுக்கு ரூ. 1000 கோடி போதுமானது!”

கொழும்பு, ஜன. 09

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஆயிரம் கோடி ரூபாயே போதுமானது என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னர், கோவிட் தொற்று காரணமாக 800 15

## ஜனாதிபதிக்கும் எனக்கும் தனி முரண்பாடு இல்லை!

*முன்னாள் ஜனாதிபதி மைத்திரி*

கொழும்பு, ஜன. 09

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எனக்கும் இடையில் தனிப்பட்ட முரண்பாடுகள் ஏதும் கிடையாது. கொள்கை ரீதியில் மாத்திரம் வேறுபாடுகள் காணப்படுகின்றன. நல்லாட்சி அரசாங்கத்தில் பண்டாரநாயக்கவின் 15



## மஹவ - ஓமந்தை ரயில் பாதை சீரமைப்பு பணிகள் ஆரம்பம்!

வவுனியா, ஜன. 09

கொழும்பு - காங்கேசன்துறை புகையிரதப் பாதையில், மஹவ தொடக்கம் ஓமந்தை வரையான பாதையை சீரமைக்கும் பணி மதவாச்சி புகையிரத நிலையத்தில் நேற்று ஆரம்பமானது. 15

## 12,000 பட்டதாரிகள் ஆசிரியர் சேவைக்கு

கொழும்பு, ஜன. 09

தற்போது நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உடனடியாக 12 ஆயிரம் பட்டதாரிகளை சேவையில் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான போட்டிப் பரீட்சை அடுத்த 15

## பிரிந்து செயல்படும் சு. கவினர் சந்திரிகாவுடன் இரகசிய பேச்சு

கொழும்பு, ஜன. 09

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து செயல்படும் அணியினர் ஒன்றாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

நேற்று மாலை டொரிங்டனிலுள்ள சந்திரிகாவின் இல்லத்தில் இந்த இரகசிய சந்திப்பு நடைபெற்றதாக 15

# இப்படியும் நடக்கிறது…!

தமிழரசு கட்சியின் மத்தியகுழு பரபரப்புக்களுக்கு மத்தியில் கூடி சில முடிவுகளை எடுத்திருக்கின்றது.

நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தமிழரசு தனித்துப் போட்டியிடவேண்டும் என்ற கருத்து ஏற்கனவே பேசுபொருளாகி அடங்கியிருந்தவேளையில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளோ, கூட்டமைப்புக்கு வெளியே இருக்கின்ற கட்சிகளையும் சேர்த்துக் கொண்டு தேர்தலில் போட்டியிடுவது பற்றி கூடிப்பேசின.

போதாக்குறைக்கு பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் த. சித்தார்த்தனும் செல்வம் அடைக்கலநாதனும் மற்றைய கட்சிகளையும் கூட்டமைப்பில் உள்வாங்கிக்கொண்டு கூட்டமைப்பை பதிவுசெய்ய வேண்டும் என்று கோரிக்கையை விடுத்ததுடன் அதற்கான காலக்கெடுவையும் விதித்திருந்தனர்.

அவர்களின் அந்த காலக்கெடு குறித்தும் தமிழரசின் மத்திய குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டு முடிவெடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த முடிவும் எதிர்பார்க்கப்பட்டதுபோலவே மற்றையவர்களை சேர்ப்பதில்லை, கூட்டமைப்பை பதிவு செய்யவேண்டியதில்லை என்றும் திட்டவட்டமாக முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

ரெலோ தலைவரும் புளொட் தலைவரும் கோரிக்கை விடுத்தவாறு விக்னேஸ்வரனை உள்வாங்குவதிலோ, அனந்தி சசிதரனை உள்வாங்குவதிலோ தமிழரசுக்கு எந்த தயக்கமும் இல்லை என்றும் அவர்கள் இருவரும் தனி நபர்களாக தமிழரசில் மீண்டும் இணையலாம் என்றும் கூறியிருக்கின்றது தமிழரசின் மத்தியகுழு.

இந்த மத்திய குழு உறுப்பினர்கள்போல ஆலோசனை வழங்க அந்தக் காலத்தில் தமிழ் காங்கிரஸில் நல்ல தலைவர்கள் இல்லாமல் போனது தமிழரசின் நல்லகாலம்.

காங்கிரஸிலிருந்து பிரிந்து வந்த தந்தை செல்வா தமிழரசுக் கட்சியை ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி ஒன்பதில் தொடங்கினார்.

பின்னர் தமிழரசு தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தை பல ஆண்டுகள் தொடர்ந்து நடத்தி, பல்வேறு ஒப்பந்தங்கள் செய்து கடைசியில் தமிழீழமே தீர்வு என்ற நிலைக்கு வருவதற்கு முன்னதாக தமிழ் காங்கிரஸுடன் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கியது.

அவ்வாறு இரண்டு கட்சிகளும் சேர்ந்து இயங்கவேண்டும் என்று முடிவெடுத்தபோது நல்ல காலம், காங்கிரஸ் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம், அப்படியொரு கோரிக்கையை முன்வைக்கவில்லை. காங்கிரஸிலிருந்து தானே சொல்வநாயகம் பிரிந்து சென்று தமிழரசு தொடங்கினார். அவர் வேண்டுமானால் மீண்டும் காங்கிரஸில் சேரலாம் என்று, தமிழரசுக்கு இன்று ஆலோசனை சொல்பவர்களைப் போன்ற புத்தியுள்ள ஆட்கள் அப்போது பொன்னம்பலத்துடன் இருக்கவில்லையோ தெரியவில்லை. அப்படி இருந்திருந்தால், தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற கட்சியே இருந்திருக்காது.

விக்னேஸ்வரனும் அனந்தியும் வேண்டுமானால் தமிழரசில் இணைந்துகொள்ளலாம். சிறீகாந்தாவும், சிவாஜிலிங்கமும் ரெலோவில் இணைந்துகொள்ளலாம். பிறகு என்ன, ஒற்றுமை சாத்தியமாகிவிட்டது.

அடுத்து கூட்டமைப்பை பதிவுசெய்யமுடியாது என்று திட்டவட்டமாக முடிவெடுத்துவிட்டது, தமிழரசு. ஆனால், அதற்கு சொல்லியிருக்கின்ற காரணம்தான் கட்சியிலுள்ள முக்கிய தலைவர்களுக்கு உடன்பாடானதா என்பது தெரியவில்லை.

“விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பை பதிவு செய்யும் நடவடிக்கைகள் அவர்களது காலத்திலும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் எனவே, தொடர்ந்தும் கூட்டமைப்பைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என்றும் தமிழரசின் மத்திய குழுக் கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.”

அதாவது யுத்தம் முடிந்த பின்னர் பல தடவைகள் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், கூட்டமைப்பு புலிகளால் உருவாக்கப்பட்டதல்ல என்பதை திரும்பத்திரும்பக் கூறிவந்திருக்கின்றார். புலிகளின் போராட்டத்தை தான் ஆதரிக்கவில்லை என்று சுமந்திரன் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கின்றார்.

ஆனால், இன்று புலிகளால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பை பதிவுசெய்யும் முயற்சியை அவர்களின் காலத்திலேயே செய்யவில்லை என்றும் அதனால் இனியும் தேவையில்லை எனவும் தமிழரசு முடிவெடுத்திருக்கின்றது.

புலிகள் இருந்தபோது, கூட்டமைப்பு எப்படி இயங்கியது என்பது இரகசியமானதல்ல. புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரின் முன்னால் சம்பந்தன் ஐயாவும் கூட்டமைப்பு எம். பிக்களும் எவ்வளவு ‘பவ்வியமாக’ அமர்ந்திருந்து அவர்களின் சொல்படி நடந்தார்கள் என்பதும் இங்கே எழுதி தெரியவேண்டியவை இல்லை.

ஆனால், அப்போது இருந்த நிலைமை இப்போது இருக்கின்றதா? கூட்டமைப்பில் இருக்கும் எந்தத் தலைவவர் பொறுப்புணர்வுடன், ஒரு கூட்டு இயக்கத்தில் தாம் இருப்பதாக உணர்ந்து கொண்டு அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்?

ஒவ்வொருவரும் தத்தமக்கு தெரிந்தவாறு - தத்தமக்கு விரும்பியவாறு அரசியல் செய்துகொண்டிருக்கின்றனர். புலிகள் இருந்தபோது இப்படியொரு நிலை இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்பதும் நமக்கு தெரியாததல்ல.

கூட்டமைப்பு பதிவு செய்யப்படுகின்றதோ இல்லையோ, புலிகள் இருந்தபோது ஒரு தலைமைக்கு கட்டுப்பட்டு எல்லோரும் இருந்ததுபோல, ஒரு தலைமை இப்போதும் தேவையாக இருக்கின்றது என்பதில் தமிழ் மக்களுக்கு கருத்து வேறுபாடு இருக்காது. அது அவசியமானது மாத்திரமல்ல, அவசரமானதும்கூட.!

- ஊர்க்குருவி

# தேர்தல்கள் ஆணைக்குழுவினரிடம் ஜனாதிபதி விளக்கம் கேட்கமுடியாது!

### ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி சீற்றம்

கொழும்பு, ஜன. 09

தேர்தல்கள் ஆணைக் குழுவை அழைத்து ஜனாதிபதி விளக்கம் கேட்க முடியாது - இவ்வாறு ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் மைத்திரி குணரத்ன தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தேர்தல் ஆணைக் குழுவில் ஜனாதிபதி தலையிட அனுமதி இல்லை. முதுகெலும்பு இல்லாதவர்கள் தேர்தல் ஆணைக்குழுவில் பதவி வகிக்க வேண்டாம் என்றும் அவர் இதன்போது கூறினார். (ஐ)

# கசிப்பு காய்ச்சிய இருவரை மடக்கி பிடித்த பொதுமக்கள்!

பூநகரி, ஜன. 09

பூநகரி, முக்கொம்பனில் கசிப்பு காய்ச்சிய இருவர் பொது மக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு கசிப்பு உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

கசிப்பு காய்ச்சப்படுவதாக பொது மக்கள் அறிந்து ஒன்று திரண்ட மக்கள் கசிப்பு காய்ச்சிய இருவரை மடக்கி பிடித்தனர். அத்துடன், பூநகரி பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர். பொலிஸார் வருவதற்கு தாமதம் ஏற்பட்ட நிலையில், அவர்கள் தப்பிச் சென்று விட்டனர்.

முக்கொம்பனுக்கு வந்த பொலிஸாரிடம் கசிப்பும், உற்பத்திக்கு பயன்பட்ட உபகரணங்களும் ஒப்படைக்கப்பட்டன.

10 நாள்களுக்கு முன்னர், முக்கொம்பன் கிராமத்தில் போதைப்பொருட்களை கட்டுப்படுத்துமாறு ஆர்ப்பாட்டம் நடத்திய நிலையில், கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுபவர்களை தடுக்கும் செயல்பாடுகளிலும் பொதுமக்கள் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

# உக்கிளாங்குளத்தில் டெங்கு விழிப்புணர்வு

வவுனியா, ஜன. 19

வவுனியா, உக்கிளாங்குளம் கிராமத்தில் டெங்கு நோயாளர்கள் அதிகரித்துள்ளனர். இதையடுத்து, டெங்கு நோயைக் கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் அனுசரணையுடன் உக்கிளாங்குளம் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் விதமாக மக்களுக்கான விசேட விழிப்புணர்வு ஊட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, வீடுகள், காணிகள், வீதிகள், பொது இடங்களை சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து பார்வையிட்டனர். இதன்போது, டெங்கு நோயை பரப்பும் சூழலை வைத்திருந்தோருக்கு அவற்றை அகற்ற கால அவகாசம் வழங்கப்பட்டது.

(ஐ-05)

# உதய நாளும் பரிசு தினமும்!

யாழ்ப்பாணம், ஜன. 09

வாழ்வகம் நிறுவனத்தின் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதயநாளும் பரிசு தினமும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

வாழ்வகம் நிறுவனத்தின் செல்லா மண்டபத்தில் அதன் தலைவர் ஆ. ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் தம்பு மங்களேஸ்வரன் பிரதம அதிதியாக பங்கேற்கிறார்.

சிறப்பு அதிதிகளாக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகர் மருத்துவர் எம். எம். றெமன்ஸ், இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாண பிரதேச மின் பொறியியலாளர் எந்திரி க. லிங்கரூபன், கொக்குவில் தொழில்நுட்பவியல் கல்லூரி மேலதிக பணிப்பாளர் கு. சாந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்வர்.

கௌரவ அதிதியாக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் பங்கேற்பார். (ஐ)

# புலிகள் புதைத்த ஆயுதங்களை தோண்டும் பணிகள் இன்று!

யாழ்ப்பாணம், ஜன. 09

கொக்குவில் பொற்பதி வீதியில் தனியார் காணி ஒன்றில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருக்கின்றன என்று சந்தேகிக்கப்பட்ட இடத்தை தோண்டுவதற்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற அனுமதி வழங்கியுள்ளது.

இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இந்தப் பகுதியை தோண்டும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. (ஐ)

# கே. கே. எஸ். பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் பதவியேற்றார்!

யாழ்ப்பாணம், ஜன. 09

காங்கேசன்துறை பிராந்தியத்தின் பொலிஸ் அத்தியட்சகராக எச். எம். நிபுண தெகிகம நேற்று ஞாயிற்றுக்கிழமை தமது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதுவரை காங்கேசன்துறை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகராக இருந்த கொட்டாச்சி ஓய்வுபெற்று சென்றார்.

இதையடுத்து அவரின் இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள எச். எம். நிபுண தெகிகம நேற்று காலை 6.45 மணியளவில் மல்லாகத்தில் உள்ள அவரின் பணிமனையில் கடமைகளை பொறுப்பேற்றார். (ஐ-09)



ஈழநாடு
Eelanadu
09.01.2023 திங்கட்கிழமை
பிலவ வருடம், மார்கழி 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# பரிகசிக்கப்படும் தமிழ் சிவில் சமூகம்?

பேச்சை கட்சிகள் எவ்வாறு கையாள வேண்டுமென்று சிவில் சமூகமாக தங்களை அடையாளப்படுத்துபவர்கள் அல்லது தங்களை குடிசார் சமூகமென்று வெளிக்காட்டிவருபவர்கள் கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். அதேபோன்று கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரள வேண்டுமென்றும் சிவில் சமூக குழுக்கள் கோரிவருகின்றன. இப்போதும்கூட, அரசு சாரா நிறுவனங்களின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளிலும் கட்சிகளின் ஒன்றிணைவு வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறான செயல்பாடுகளுக்கு மத்தியில்தான், இலங்கை தமிழரசு கட்சியானது உள்ளூராட்சி தேர்தலை தனித்து எதிர்கொள்வதற்கான அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றது. இதன் பொருள் என்ன?

2009இல் யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து, ஐந்து கட்சிகளின் கூட்டான தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் தேசிய அரசியலை பொறுப்பேற்றது. 2010இல், கட்சிகளுக்கான ஆசன ஒதுக்கீடு விவகாரத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளின் காரணமாக (ஏனைய கட்சிகளின் பார்வையில்) கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. கொள்கை முரண்பாட்டின் காரணமாக வெளியேறியதாகவே பொன்னம்பலம் அணி கூறிவருகின்றது. பின்னர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்) வெளியேறியது. கூட்டமைப்பின் கட்டமைப்பிலுள்ள சிக்கல்களை காரணம்காட்டியே ஈ. பி. ஆர். எல். எவ். வெளியேறியது.

பின்னர், கூட்டமைப்பால் முதலமைச்சராக்கப்பட்ட சி. வி. விக்னேஸ்வரன் கூட்டமைப்புக்கு எதிராகக் கட்சியொன்றை உருவாக்கினார். இந்த இடைப்பட்ட காலத்திலும் - அதற்கு பின்னரும், தமிழ் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்தவர்கள், புத்திஜீவிகள், கருத்துருவாக்கிகள், மதத்தலைவர்களென்று பலரும் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டனர். ஆரம்பத்தில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோரை ஒன்றிணைத்து புதிய கூட்டணியொன்றை உருவாக்கும் முயற்சிகள் இடம்பெற்றன. அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை.

பின்னர் விக்னேஸ்வரன் தலைமையில் கூட்டமைப்புக்கு வெளியிலிருக்கும் தமிழ்த் தேசிய கட்சிகளை ஒன்றிணைத்து, மாற்று தமிழ் தேசிய அணியொன்றை கட்டியெழுப்பும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. இதேபோன்று, தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் (பேரவை என்பது கட்சிகளையும் உள்ளடக்கியது) மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை. அனைத்து முயற்சிகளின்போதும் சிவில் சமூகத்தின் கருத்துகள் கருத்தில் கொள்ளப்படவில்லை. அவர்களின் உழைப்பு பரிகசிக்கப்பட்டது. ஆனாலும்கூட, வேதாளம் முருங்கை மரத்தில்போல் கட்சிகள் செயல்பட்ட போதும்கூட, மீண்டும்மீண்டும் விக்கிரமாதித்தியன்கள் போன்று சிவில் சமூக குழுக்களும் செயல்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால், ஒருபோதுமே சிவில் சமூகத்தின் கருத்துகள், கரிசனைகள் கருத்தில் கொள்ளப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், பலரும் ஓரணியாக நில்லுங்கள் என்று, சிவில் சமூகம் கூறிவருகின்ற நிலையில், தமிழரசு கட்சியானது தேர்தலை தனியாக எதிர்கொள்ளவுள்ளதாக அறிவித்திருக்கின்றது. ஒரு கட்சிக்கு தேர்தலை தனித்து எதிர்கொள்வதா அல்லது இணைந்து எதிர்கொள்வதா என்று முடிவெடுக்கும் உரிமையுள்ளது. ஆனால் இங்கு, ஒன்றாக நில்லுங்கள் என்று கூறிவருபவர்களின் கருத்துகளுக்கு வழங்கப்படும் மதிப்பு என்ன?

சிவில் சமூகங்களாகத் தங்களை முன்னிறுத்துபவர்கள் தேர்தல் அரசியல் சிக்கல்களை விளங்கிக்கொள்ளால் கற்பனை செய்கின்றனரா அல்லது அவர்கள் தங்களை பலமான நிலையில் அணிதிரட்டிக்கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனரா?

சிவில் சமூக அமைப்புக்கள் வெறும் வாய்ச்சொல் வீரர்களாக இருக்கும் வரையில், இவ்வாறான பரிகசிப்புகள் தொடரும். ஏனெனில், சிவில் சமூகமாக தங்களை முன்னிறுத்துபவர்கள் எவருமே அரசியல் கட்சிகளின் இருப்பை கேள்விக்கு உள்ளாக்க முடியாதவர்கள். இதன் காரணமாகவே, அவர்களின் குரல்களுக்கு தமிழ்த் தேசிய கட்சிகள் செவிசாய்ப்பதில்லை. சிவில் சமூக அமைப்புக்கள், இப்போதிருக்கின்ற நிலையிலேயே இருக்குமாயின், இனியும் இவ்வாறுதான் நடக்கும்.

# வெளிநாட்டு பயணிகள் தொடர்பில் அரசு கவனம் செலுத்தவேண்டும்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

*கொழும்பு, ஜன. 09*

சீனாவிலும் பல நாடுகளிலும் கொரோனா வைரஸ் வேக மாக பரவி வருவதை கருத்தில் கொண்டு இலங்கைக்கு பயணிக்கும் நபர்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தி ஊடகப் பேச்சாளர் கலாநிதி சாமில் விஜயசிங்க, தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான அடிப்படையில் முடிவுகளை எடுப்பதற்கு கோவிட் -19 தொழில்நுட்பக் குழு ஒன்றுகூட வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

கோவிட் 19 மீண்டும் பரவத் தொடங்கினால், தற்போது பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நாடு, அதன் தாக்கத்தை தாங்க முடியாது - என்றார்.

இதேவேளை, தொற்று நோய்கள் மருத்துவமனையின் ஆலோசகர் மருத்துவர் ஆனந்த விஜயவிக்ரம, கோவிட் 19 அறிகுறிகள் மாறியிருப்பதில் உண்மையில்லை. மேலும் நாட்டில் புதிய மாறுபாடுகள் தோன்றவில்லை. எவ்வாறாயினும், சாத்தியமான தொற்றுநோய்களைத் தடுக்க நல்ல சுகாதார நடைமுறைகளைத் தொடர வேண்டும் என்றார். (ஐ)

# யாழ். பிரதி பொலிஸ்மா அதிபர் நேற்று பதவியேற்று கொண்டார்!

*யாழ்ப்பாணம், ஜன. 09*

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் நேற்று ஞாயிற்றுக் கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

நேற்றுக் காலை யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதிப்பொலிஸ்மா அதிபர் பணிமனையில் காலை 8.30 மணியளவில் கடமைகளை பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதுவரைகாலமும் கடமையாற்றிய விஜித குணரத்ண ஓய்வு பெற்றமையை அடுத்து பாராளுமன்ற பிரிவுக்கு பொறுப்பதிகாரியாக இருந்த மஞ்சுள செனரத்ன கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். (ஐ-03)



# பணியிலிருந்தபோதே பணத்தை கொள்ளையடித்த பொலிஸ்காரர்!

*புத்தளம், ஜன. 09*

கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பணத்தை கொள்ளையிட்டு தப்பிச் சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புத்தளம் - சிலாபம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் மேலும் நால்வருடன் இணைந்தே பணத்தை கொள்ளையடித்து விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

தமது பொலிஸ் பகுதியில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த லொறியை நிறுத்தி சுமார் 30 இலட்சம் ரூபாய் பணத்தை அவர் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் மோட்டார் சைக்கிளுடன் மக்குலுகஸ்வெவ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு ஹிரானேகம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து சந்தேக நபர் நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே இந்த கொள்ளை சம்பவத்துடன் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருக்கும் தொடர்பு இருந்தமை தெரியவந்துள்ளது.

# ஐ. தே. கவுடன் கூட்டணி; பேச்சு இன்று ஆரம்பம்!


*கொழும்பு, ஜன. 09*

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்த கட்சிகள் மற்றும் குழுக்களுடன் இன்று திங்கட்கிழமை முதல் பேச்சுகளை ஆரம்பிக்கவுள்ளதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

இதனிடையே, தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் செயலாளர் நாயகம் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

அத்துடன், நேர்முகதேர்வுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜனவரி - 09 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 25
நல்ல நேரம் : 06.30 - 7.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : திருதியை




**மேடம்**
முன்னோர் ஆசி உண்டு. குடும்பத்துடன் கோயிலுக்கு சென்று மகிழ்வீர்கள். உங்கள் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். குடும்பத்தில் ஒருவரின் தேவைகளை நிறைவேற்றுவீர்.

**இடபம்**
மற்றவரால் ஏற்பட்ட பிரச்னை முடிவிற்கு வரும். நிம்மதி காணும் நாள். செயலில் இருந்து வந்த தடை விலகும். விஜபிகள் உங்களுக்கு உதவுவார்கள். கொடுக்கல் வாங்கல் சீராகும்.

**மிதுனம்**
குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் விலகும். தம்பதிக்குள் ஒற்றுமை உண்டாகும். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். பொருளாதார நிலை உயரும். பணத்தைக் கையாளுவதில் கவனம் தேவை.

**கடகம்**
எதிலும் அவசரம் வேண்டாம். அமைதியாக செயல்படுங்கள். ஒரே நேரத்தில் பல வேலைகளை சந்திக்க வேண்டிய நிலை உண்டாகும். செயல்களில் அலைச்சலும் தடுமாற்றமும் உண்டாகும்.

**சிம்மம்**
திடீர் செலவுகளால் நெருக்கடிக்கு ஆளாவீர். பண வரவிற்கான முயற்சி இழுபறியாகும். குடும்பத்தினரால் சிறு நெருக்கடிகளுக்கு ஆளாவீர்கள். கோபத்தைக் குறைப்பது நன்மை தரும்.

**கன்னி**
நீண்டநாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். எதிர்பார்த்த வரவு வரும். நெருக்கடிகளில் இருந்து விடுபடுவீர்கள். வியாபார முன்னேற்றத்திற்காக புதிய முயற்சி ஒன்றை மேற்கொள்ளும் நாள்.

**துலாம்**
சுறு சுறுப்பாக செயல்பட்டு உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். மகிழ்ச்சியான நாள். தொழிலில் இருந்து வந்த தடை விலகும். கூட பணிபுரிவோரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**விருட்சிகம்**
இரண்டு நாட்களாக இருந்த நெருக்கடி விலகும். உங்கள் எதிர்பார்ப்பு இன்று நிறைவேறும். மனதில் ஏற்பட்ட குழப்பம் விலகும். விஜபிகள் ஆதரவால் நன்மை உண்டாகும்.

**தனுசு**
சந்திராஷ்டமம் என்பதால் செயல்களில் கவனம் தேவை. அமைதி காப்பது நல்லது. எதிர்பார்ப்பு இழுபறியாகும். விரோதிகளால் சங்கடங்களை சந்திக்க வேண்டி வரும். உங்கள் முயற்சியில் தடை ஏற்படும்.

**மகரம்**
குடும்பத்தினர் ஒத்துழைப்புடன் ஒரு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். நண்பர்கள் வழியே நன்மை அதிகரிக்கும். உங்கள் விருப்பம் நிறைவேறும். எதிர்பார்த்த செய்தி வரும்.

**கும்பம்**
எதிர்ப்புகள் விலகும். துணிச்சலுடன் செயல்பட்டு எண்ணியதை அடைவீர்கள். கவனமுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். உங்கள் விருப்பம் நிறைவேறும். எதிர்பாராத வரவு வந்து சேரும்.

**மீனம்**
குடும்பத்தினர் நன்மைக்காக எதிர்கால திட்டம் ஒன்றை மேற்கொள்வீர்கள். பிள்ளைகள் எதிர்காலம் குறித்த முயற்சியில் அதிக அக்கறை காட்டு வீர்கள். உறவினர்களுடன் ஏற்பட்ட பிரச்னை விலகும்.

# பாராளுமன்ற தேர்தலில் மோடி இராமநாதபுரத்தில் போட்டி?



சென்னை, ஜன. 09

வரும் பாராளுமன்றத் தேர்தலில் இராமநாதபுரம் தொகுதியில் பிரதமர் மோடி போட்டியிடவுள்ளார் என்று பரபரப்பு தகவல்களை தமிழக ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

அந்த ஊடகங்களின் தகவலின்படி, பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறும்போது, “பிரதமர் மோடி தமிழகத்தில் போட்டியிட வேண்டும் என்பது எங்களுக்கும் விருப்பம்தான். ஆனால், இதுகுறித்து எந்த அதிகார பூர்வ அறிவிப்பும் வரவில்லை” என்றார்.

இதேநேரத்தில், ஓ. பன்னீர் செல்வம் தரப்பைச் சேர்ந்த மூத்த தலைவர் ஒருவர் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், “கடந்த முறையே மோடி இராமநாதபுரத்தில் போட்டியிடுவார் என்று எதிர் பார்த்தோம். வரும் மக்களவைத் தேர்தலில் இராமநாதபுரத்தில் மோடி போட்டியிடுவது உண்மையாகக்கூட இருக்கலாம்” என்று தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் இராமநாதபுரத்தில் நடந்த தேவர் ஜெயந்தி விழாவில் பிரதமர் கலந்து கொள்ளவிருக்கிறார் என்று தகவல் பரவியது. அப்போதிருந்தே மக்களவைத் தேர்தலில் இராமநாதபுரத்தை மோடி குறிவைத்துள்ளார் என்ற தகவல்கள் கிளம்பி விட்டன.

மோடி தமிழகத்தில் போட்டியிட்டால், இராமநாதபுரத்தை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் விவாதங் கள் நடக்கின்றன. இதனால் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பிரதமர் மோடி வாரணாசி தொகுதி மக்களவை உறுப்பினர். வாரணாசி (காசி) இந்துக்களின் புனித நகரம். நாட்டில் பல்வேறு மொழி வேறுபாடுகள் இருந்தாலும், காசியும், இராமேஸ்வரமும் பிணைந்திருப்பவை. எனவே, வரும் மக்களவைத் தேர்தலில், காசியுடன், இராமேஸ்வரம் அடங்கியுள்ள இராமநாதபுரம் தொகுதியிலும் போட்டியிட்டு, இந்தியர்களின் ஒற்றுமையை மேலும் வளர்த்து, வட இந்தியா, தென் இந்தியா உறவை வலுப்படுத்தப்படுத்த மோடி வியூகம் வகுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்வில் பேசிய மோடி, காசிக்கு விஸ்வநாதர், தமிழகத்துக்கு இராமேசுவரம் இராமநாத சுவாமி பெருமை சேர்ப்பதாகப் பேசியிருந்தார். இராமநாதபுரத்தில் போட்டியிட்டால், இராமர்சேதுவை தனது அரசியல் பிரசாரத்தின் மையத் தூணாக மாற்ற பா. ஜ. க. திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

2019 மக்களவைத் தேர்தலில் இராமநாதபுரம் தொகுதியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர் 44 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். பா. ஜ. க. வேட்பாளர் 32.2 சதவீத வாக்குகள் பெற்றார். இந்நிலையில், அ. தி. மு. கவுடன் எப்படியும் கூட்டணி சேர்ந்துதான் தேர்தலை சந்திக்க வேண்டும் என்று பா. ஜ. க. உறுதியாக இருக்கிறது.

தமிழகத்தில் மோடி போட்டியிடுவது உறுதியானால், அ. தி. மு. கவை ஒன்றிணைப்பதில் பா. ஜ. க. பங்கும் பெருமளவு இருக்கும். அதே போல, இராமநாதபுரத்தில் மோடி போட்டியிட்டால், தொகுதிப் பங்கீட்டில் பா. ஜ. கவின் பேரம் பேசும் சக்தி அதிகரிக்கும். மேலும், தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கும் என்றும் பா. ஜ. க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# நாம் கொதிப்படையும் விசயங்களை கூறவே ஆளுநர் அனுப்பப்பட்டுள்ளார்!

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்

வேலூர், ஜன. 09

“நாம் கொதிப்படையக் கூடிய விசயங்களை கூறுவதற்காகவே ஆளுநர் அனுப்பப்பட்டுள்ளார் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்” என்று காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவர் கே.எஸ்.அழகிரி வேலூரில் இன்று (ஜன.7) செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறும்போது, தமிழ்நாடு என்று சொல்லக் கூடாது, தமிழகம் என்று சொல்ல வேண்டும் என்று ஆளுநர் கூறியுள்ளார். தமிழ்நாட்டை எவ்வாறு அழைப்பது என்பது நமக்குதான் தெரியும். தமிழகம் என்பதற்கும், தமிழ்நாடு என்பதற்கும் பெரிய வித்தியாசம் கிடையாது. ஆனால், தமிழ்நாடு என்பதுதான் நம்முடைய நாடு. இதுபோன்று பல நாடுகள் சேர்ந்ததுதான் நமது இந்திய அரசு. இது நமது அரசியல் அமைப்பு சட்டத்தில் உள்ளது.

500இற்கும் மேற்பட்ட சமஸ்தானங்கள் சேர்ந்ததுதான் இந்தியா. இந்தியா என்று ஒரு நாடு இல்லை. இந்தியா என்பது தேசம். நாடுகளின் கூட்டமைப்புதான் தேசம். ஆந்திரா, பஞ்சாப், தமிழ்நாடு எல்லாம் இணைந்ததுதான் இந்தியா. வேற்றுமையில் ஒற்றுமை என்று காந்தி சொன்னது இதுதான். இவை எல்லாம் ஆளுநருக்கு தெரிய வாய்ப்பு இல்லை. ஆளுநர் ஒன்று தெரிவித்துவிட்டதால் நாம் கொதிப்படைய வேண்டாம். நாம் கொதிப்படையக் கூடிய விசயங்களை கூறவே இந்த ஆளுநர் அனுப்பப்பட்டுள்ளார் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்” என்று அவர் கூறினார்.

# பா. ஜ. க. - அ. தி. மு. க. கூட்டணியே தொடரும்!

## பா. ஜ. க. தமிழக தலைவர்

சென்னை, ஜன. 09

பாராளுமன்றத் தேர்தலில் பா. ஜ. க. - அ. தி. மு. க. இடையேயான கூட்டணி தொடரும் என தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்தார். தமிழக பா. ஜ. கவின் கலை மற்றும் கலாசாரப் பிரிவு சார்பாக தமிழ்த்தாய் விருது வழங்கும் நிகழ் வில் பங்கேற்று கலைத் துறையினருக்கு தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை விருதுகளை வழங்கினார்.

அதில் பேசிய அவர், கடந்த ஆண்டு கலைத்துறையினருக்கு மத்திய அரசு விருதுகளை அறிவித்த போது, நமது சித்தாந்தங்களுக்கு எதிராக பேசியவர்களுக்கு ஏன் விருது வழங்குகிறீர்கள்? என பலர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

கலைத்துறையினருக்கு வழங்கப்படும் விருது என்பது அவர்களின் திறமையைப் பார்த்துவழங்கப்படுவது எனக் கூறி, விருது பெற்றவர்களை வீடுகளுக்கு சென்று சந்தித்து வருமாறு நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டேன். கலைஞர்கள் அரசியலைக் கடந்து நிற்பவர்கள்

தற்போது பா. ஜ. க. - அ. தி. மு. க. கூட்டணியில் எந்த பிரச்னையும் இல்லை. வரும் பாராளுமன்ற தேர்தலிலும் அ. தி. மு. கவுடன்தான் கூட்டணி. இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை தமிழக பா. ஜ. க. மிகவும் தெளிவாக உள்ளது. 39 தொகுதிகளிலும் கடுமையாக உழைத்து கட்சியைப் பலப்படுத்த வேண்டும். அனைத்து தொகுதிகளிலும் வெல்ல வேண்டும் என்பதே எங்களின் இலக்கு. - என்றார். (ஐ)

# திருமலை துறைமுகத்தில் சீனாவின் ஆதிக்கம் பெருகாது தடுக்கவேண்டும்!

## இந்தியாவில் விக்னேஸ்வரன் எம். பி.

சென்னை, ஜன. 09

**திருகோணமலைத் துறைமுகத்தில் சீன ஆதிக்கம் பெருகவிடாது தடுப்பதே இந்தியாவுக்கு பாதுகாப்பு என தமிழ் மக்கள் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

துறைமுகத்தில் துறைமுகம் சார் பெரிய கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி நோக்கம் கொண்ட பெரிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்கான சாத்தியப்பாடுகள் கண்டறியப்பட்டு அவற்றை இந்திய அரசும் முதலீட்டாளர்களும் விரைந்து முன்னெடுக்க வேண்டும். இதன் மூலம் வடக்கு - கிழக்கு தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மட்டுமன்றி மலையக தமிழ் இளைஞர், யுவதிகள் பலரும் பெருநன்மையடைவர் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் ஒன்பதாம் ஆண்டு மாநாடு சென்னை வர்த்தக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அம்மாநாட்டில் இலங்கையில் தமிழர்களின் பொருளாதார வளர்ச்சி எனும் தலைப்பில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், புலம்பெயர் தமிழர்கள் தாயகத்தில் முதலிட முன்வரும்போது தென்னிந்தியாவைச் சேர்ந்த தொழில் முனைவாளர்கள், உற்பத்தியாளர்கள், முதலீட்டாளர்கள், சேவைத் துறை சார்ந்தவர்களுடன் இணைய வேண்டும்.

அத்துடன், இந்தியாவுடன் இலகுவில் இணைக்கப்படக் கூடிய மன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையேயான போக்குவரத்து வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு உறவை கட்டி எழுப்பப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். பணிமனை திறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 09

ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண தொகுதிக்கான பிரதான பணிமனை நேற்று நல்லூரில் திறந்து வைக்கப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம், நல்லூர் செட்டித்தெருவில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரணவால் பணிமனை திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவரின் ஒருங்கிணைப்பு செயலாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளருமான உமாச்சந்திரா பிரகாஷ், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட அமைப்பாளர், யாழ்ப்பாண தொகுதி பிரதம அமைப்பாளர் ஜெயேந்திரன், தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவ தியாகேந்திரன், கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# சுன்னாகத்தில் வாள்வெட்டு; ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜன. 09

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயிலங்காட்டில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத 4 பேர், ஒருவர் மீது வாள் வெட்டை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு நடந்த இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் ஏழாலை தெற்கு மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த குலசிங்கம் சூரியகுமார் என்பவரே படுகாயமடைந்தார்.

வாள்வெட்டை நடத்தியவர்கள் யாரென அடையாளம் காணப்படவில்லை. சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஆளும் கட்சி போன்று செயல்படும் எதிர்க்கட்சியை ஆதரிக்க வேண்டும்!

## யாழில் ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 09

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக எதிர்கட்சி ஒன்று ஆளும் கட்சியைப் போன்று செயல்பட்டு வருகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளர் உமாசந்திரா பிரகாஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண தொகுதி பணிமனை நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை அரசமைப்பின் பிரகாரம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும் இலங்கை மக்களின் மனங்களை வென்ற தலைவராக இருக்கின்றார். எதிர்க்கட்சி என்ற வகையிலே இலங்கை சுதந்திரமடைந்த பின் ஆளுங்கட்சியை விமர்சிப்பது மட்டுமே செயல்பாடாக இருந்த நிலையை மாற்றி எதிர்க்கட்சியிலிருந்துகொண்டு மக்களுக்கான சேவைகளை வழங்கக்கூடிய ஆற்றல் உள்ளது என்பதை நிரூபித்த தலைவராக வரலாற்றிலே இடம்பிடித்துள்ளார்.

இன, மத, மொழி கடந்து அனைத்து மக்களும் சமமாக வாழ்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்கக்கூடிய தலைவராக சஜித் பிரேமதாஸ நம்பிக்கையுடன் இருக்கின்றார். 2023 உள்ளூராட்சி தேர்தல் என்பது அனைவருக்கும் பிரதான தேர்தல். ஏனெனில் இலஞ்சம் ஊழலற்ற வெளிப்படைத் தன்மையாக மக்கள் ஆணையை முன்னிறுத்தக்கூடிய முதலாவது தேர்தலாக இதைப் பார்க்கின்றோம்.

எங்களுடைய கட்சி ஆரம்பிக்கப்பட்டு வெறும் மூன்று வருடங்களாகக் காணப்பட்டாலும் பெரும் வளர்ச்சி கண்டுள்ளோம். எனவே, இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலிலே பல புதிய முகங்கள், இளைய தலைமுறையினர், பெண்கள், துறைசார் வல்லுநர்களோடு அரசியல் துறைகளிலே சிறப்பாகச் செயல்படுபவர்களையும் இணைத்துக் கொண்டு, எங்களுடைய அரசியல் பயணம் ஆரம்பமாகவுள்ளது - என்றார். (ஐ)



# மானிப்பாய் பிரதேச சபையால் இயற்கை உரம் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 09

மானிப்பாய் பிரதேச சபையால் அதன் எல்லைக்கு உட்பட்ட 400 பயனாளிகளுக்கு இயற்கை உரம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், தெரிவு செய்யப்பட்ட 15 பயனாளிகளுக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான மலசலகூடத் திட்டத்தை வழங்குவதற்கு கடிதங்களும் கையளிக்கப்பட்டன.

மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பிரதம அதிதியாகவும், சிறப்பு அதிதியாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் சபையின் தவிசாளர், வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண உள்சூராட்சி ஆணையாளர், பிரதேச சபையின் உறுப்பினர்கள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# விபத்துகளை தடுப்பதற்கு நடவடிக்கைகள் அவசியம்!

## ஆறு. திருமுருகன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 09

வடக்கில் இடம்பெற்று வரும் வீதி விபத்துகளை தடுப்பதற்கு துறைசார்ந்த அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்து மாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார் .

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் பல இடங்களிலும் வீதி விபத்துகள் இடம்பெற்று வருகிறது. எனினும், இந்த விபத்துகள் தொடர்பில் யாரும் கவனிப்பதாக இல்லை இந்த விபத்துக்களில் வடக்கு மாகாணம் முன்னிலையில் காணப்படுகிறது.

இதனை தடுப்பதற்கோ அல்லது மாற்று வழிகள் தொடர்பில் சிந்திப்பது தொடர்பிலும் கவனம் இல்லை. விபத்துகள் நடைபெற்றால் மட்டும் அது பற்றி கதைக்கிறார்கள் பின்னர் மறந்து விடுகிறார்கள். இவ்வாறு இருக்க முடியாது உயிர்கள் பாதுகாக்க வேண்டியது அனைவரின் கடமையாகும்.

தற்போதைய சுழலில் வடக்குக்கான ரயில் சேவை புனரமைப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளது. இந்த சூழலில் பேருந்துகளின் போக்குவரத்து அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சூழலில் அதிகமான பேருந்துகள் போக்குவரத்து செய்யும் போது போட்டி ஏற்பட்டு விபத்துகள் ஏற்பட வாய்ப்புகளும் அதிகரிக்க சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளது.

போக்குவரத்து கடமையில் ஈடுபட்டுவரும் பொலிஸார் சாதாரணமாக மோட்டார் சைக்கிளை பரிசோதிப்பதை மாத்திரம் செய்யாது போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வரும் வாகனங்களையும் பரிசோதனை செய்ய வேண்டும்.

இ.போ.ச. பேருந்துகள் உட்பட அனைத்து வண்டிகளையும் சோதனை செய்யவேண்டும். சாரதி அனுமதி பத்திரங்கள் மட்டுமன்றி போக்குவரத்திற்கு ஏற்ப வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளனவா என்பதையும் சோதனை செய்ய வேண்டும்.

தூர போக்குவரத்தில் ஈடுபடும் அனைத்து வாகனங்களும் ஒருசில இடங்களில் நிறுத்தி ஆலய வழிபாடுகள், உணவு உண்பதற்கான நேரங்கள், மலசல பயன்பாடுகளுக்கென நேரங்களை ஒதுக்கி சற்றுநேர ஓய்வு எடுத்து செல்வதற்கான ஒழுங்குகளை பின்பற்ற வேண்டும். இதனை உறுதி செய்யும் வகையில் துறைசார்ந்த அதிகாரிகள், பொலிஸார் ஈடுபட வேண்டும்.

அண்மைக் காலங்களில் இடம்பெற்ற விபத்துக்களால் தேவையற்ற உயிரிழப்புகள் , உடல் அங்கவீனங்கள் ஏற்பட்டுள்ளது. ஒன்றுமே அறியாத சிறுவனுக்கு கையை அகற்றி வாழ்நாள் மீளுவதுமே அங்கவீனமுடைய சிறுவனாக மாறியுள்ளான் இந்த நிலை ஏன் எற்பட வேண்டும் யார் இதைபற்றி சிந்திப்பது?

போக்குவரத்தில் ஈடுபட்டு வரும் அனைத்து சாரதிகளும் நடத்துநர்களும் தங்கள் கடமைகளை பொறுப்புக்களை உணர்ந்து சேவையாற்ற வேண்டும். இதற்கான அதிகாரிகள் பொலிஸார் தமது கடமையை உணர்ந்து செயலாற்ற வேண்டும் என்பதை சமய தலைவனாக கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (ஐ)

# ஒற்றையாட்சிக்குள் தமிழரை முடக்க துணை போகதீர்கள்!

## தமிழக தலைவர்களை கோருகிறார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், ஜன. 09

**ஒற்றையாட்சிக்குள் தமிழர்களை முடக்கும் நிலைப்பாட்டுக்கு துணைபோகாமல், ஈழத்தமிழர் நலன்சார் விடயத்தில் ஆக்கபூர்வமாக இருக்க வேண்டும் என்று தமிழக தலைவர்களிடத்தில் விநயமாக கோருகிறேன் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக சந்திப்பானது நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சென்னையில் நேற்றைய தினம் (வெள்ளிக்கிழமை) தொல். திருமாவளவன் மற்றும் மகேந்திரன் ஆகியோரின் பங்களிப்புடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுமந்திரன் மற்றும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணன் ஆகியோர் பத்திரிகையாளர் சந்திப்பில் பங்கேற்றனர்.

அவர்கள் இந்தியாவால் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தக் கோரிய தோடு 13ஆம் திருத்தச்சட்டம் தமிழ் மக்களுக்குரிய தீர்வல்ல என்றும் வலியுறுத்தினர்.

எம்மைப் பொறுத்தவரை சுமந்திரனின் இக்கருத்து ஆச்சரியமல்ல. சுமந்திரன் திட்டமிட்டு தமிழ் தேசிய அரசியலுக்குள் கொண்டுவரப்பட்டவர். ஆனால், திருமாவளவன் மகேந்திரன் போன்றவர்கள் ஈழப் போராட்டத்தின்போது ஈழத்தமிழர்களுக்காக உறுதியாக குரல்கொடுத்தவர்கள்.

போராட்ட காலத்துக்கு முன்னர் இவர்கள் இருவரின் வாயால் கூட 13ஆம் திருத்தச் சட்டமும் மாகாண சபை முறைமையும் தீர்வு என்று உச்சரித்ததை நான் அறியவில்லை. அவர்கள் இந்த 13ஆம் திருத்தச்சட்டத்தை அமுலாக்குமாறு மத்திய அரசை கோரும் கருத்தானது எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகர் சந்திரசேகரன் ஐயா ஈழப் போராட்டத்தை மிகவும் நேசித்தவர். அவர்களின் கட்சியினரும் தனித்துவமாக ஈழத்தமிழர்களுக்காக செயற்பட்டவர். அப்படிப்பட்ட கட்சியில் இருந்துவந்த இராதாகிருஷ்ணன் 13ஆம் திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த வலியுறுத்தும் செயல்பாடானது வெறுப்புக்குரியது.

இந்தியாவின் மத்திய அரசு 13ஆம் திருத்தச்சட்டம் தமிழர்களுக்கு இறுதித் தீர்வு என்ற நிலை இன்று வரை தொடர்கிறது. இன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த விடுதலைப் புலிகள் 13ஆம் திருத்தச்சட்டத்தை தீர்வுக்கான ஓர் ஆரம்பப்புள்ளியாகக் கூட கருத மறுத்தனர். அதனால் தான் 30 வருடங்கள் போராட்டம் நடைபெற்றது.

அவ்வாறிருக்கையில், அதனை ஆரம்பப் புள்ளியாகக் கருதினால் தமிழர் தரப்பு ஒற்றையாட்சிக்குள் முடங்கிவிடும். இது வரைக்கும் தமிழர் சரித்திரத்திலே ஒற்றையாட்சி முறை கொண்டுவந்த நிலையில் தமிழர் தரப்பு நிராகரித்ததாலேயே இன்று வரை இலங்கையில் இனப்பிரச்னை காணப்படுகிறது. 13ஐ ஆரம்பப்புள்ளியாக வலியுறுத்தும் தமிழர் தலைவர்கள் என்று கூறுபவர்கள் அரசின் அடிமையாக செயற்பட்டாலும், இன்று தமிழர் போராட்டத்துக்கு பக்கபலமாக செயலாற்றிய தமிழகத் தலைவர்கள் நிலைமாறியுள்ளனர்.

திருமாவளவன், மகேந்திரன் போன்றோர் இவ்வாறு செயற்படுவது தமிழர்களின் விடயத்தில் ஏமாற்றமளிக்கிறது. அவர்களிடம் ஒற்றையாட்சிக்குள் முடக்கும் 13ஆம் திருத்தச்சட்டத்துக்கு ஆதரவளிக்காமல் கடந்த 35 வருடங்களாக தமிழர் நலன் சார்பில் எவ்வாறு செயல்பட்டீர்களோ, அந்த நிலையில் உறுதியாக இருக்க வேண்டும் என்று கெஞ்சிக் கேட்கிறோம்.

புலம்பெயர் தேசத்தில் வாழும் உறவுகள் எவ்வாறு தமிழர் தரப்பின் மீது கரிசனையுடன் உள்ளனரோ அதுபோலவே தமிழக தலைவர்களும் செயல்படவேண்டுமென எதிர்பார்க்கிறோம் - என்றார். (ஐ)

## பாதிக்கப்படும் சமூகங்களுக்கு உதவ 81 கோடி ரூபாய் வழங்குகிறது கனடா!

கொழும்பு, ஜன. 09

ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களின் மனிதாபிமான முறையீடுகளுக்கு பதிலளிக்கும் வகையில், இலங்கையில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு கனடா 30 இலட்சம் டொலர்களை (ஏறத்தாழ 81. 7 கோடி இலங்கை ரூபாய்) வழங்குகிறது.

அவசரகால உணவு உதவி, சுகாதாரம், ஊட்டச்சத்து சேவைகள், பாதுகாப்பான தண்ணீர் மற்றும் பிற அத்தியாவசிய சேவைகள் அதிகமாக தேவைப்படுபவர்களுக்கு ஐ.நா மற்றும் செஞ்சிலுவை சங்கத்தின் மூலம் அவர்களின் உள்ளூர் பங்காளர்களுடன் இணைந்து இந்த சேவைகள் வழங்கப்படும்.

மேலும், இலங்கையின் உடனடி தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும், அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள், பொருட்களை கொள்வனவு செய்தல் உட்பட இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவுவதற்கும் தொடர்ந்து சர்வதேச உதவித் திட்டங்களை கனடா முன்னெடுத்துள்ளது.

இந்த இக்கட்டான காலங்களில் அனைத்து இலங்கையர்களுடனும் கனடா தொடர்ந்து நிற்கிறது. அத்துடன் அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் வளமான இலங்கையை ஆதரிப்பதில் உறுதியாக உள்ளது. (ஐ)

## கொழும்பு - கே. கேஸ். எஸ். ரயில் நேற்று முதல் அநுராதபுரம் வரையே!

கொழும்பு, ஜன. 09

கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறை வரை செல்லும் ரயில்கள் நேற்று முதல் தமது சேவையை கொழும்பில் இருந்து அநுராதபுரம் வரை மட்டுப்படுத்தப்படுத்தின.

வடக்கு புகையிரதப் பாதை நவீனமயமாக்கல் பணிகள் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது. புகையிரதப் பாதையை நவீனப்படுத்துவதற்கு சுமார் ஐந்து மாதங்கள் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## உள்ளூராட்சி சபை தேர்தல்; 20 குழுக்கள் கட்டுப்பணம்!

கொழும்பு, ஜன. 09

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு நேற்று முன்தினம் மாலை வரையில் 20 குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ரட்நாயக்க தெரிவிக்கையில்,

களுத்துறை மாவட்டத்தில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன 17 உள்ளூராட்சி மன்றங்களுக்காக கட்டுப்பணம் செலுத்தியுள்ளன. கண்டியில் இரண்டு சுயேச்சைக் குழுக்களும் பண்டாரவளை மாநகர சபைக்காக ஒரு சுயேச்சை குழுவும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

சுயேச்சைக் குழுவுக்காக ஒரு வேட்பாளருக்காக கட்டுபணமாக ஐயாயிரம் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சி வேட்பாளர் ஒருவருக்காக ஆயிரத்து 500 ரூபாய் செலுத்தப்படவேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)



## திருவாசக அரண்மனையில் திருவாசகம் முற்றோதல்!

வடமராட்சி, ஜன. 09

இலங்கை முதலுதவி சங்கம் இந்து சமய தொண்டர் சபை இணைந்து ஏற்பாடு செய்த திருவாசக முற்றோதல் நேற்று சனிக்கிழமை நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் நடைபெற்றது.

இலங்கை முதலுதவி சங்க ஆணையாளர் வை. மோகனதாஸ் தலைமையில் இடம் பெற்ற இத் திருவாசக முற்றோதலில் இலங்கை முதலுதவி சங்க தொண்டர்கள். கண்காணிப்பாளர்கள், இந்து சமய தொண்டர்கள் மற்றும் ஓதுவார்கள் பங்கேற்றனர்.

மேலும் இலங்கை முதலுதவி சங்கம், இந்து சமய தொண்டர் சபையில் இணைந்து சமய, சமூக பணிகளில் ஈடுபட்டவர்களை அர்ச்சகர் சிவசிறீ குமார சுவாமி நாதக் குருக்கள், சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார். அத்துடன், ஆன்மீகப் பிரசங்கம் ஒன்றையும் நிகழ்த்தினார். (ஐ-02)

## 24 புள்ளிகள் கழிக்கப்பட்டால் சாரதி பத்திரம் இரத்தாகும்!

கொழும்பு, ஜன. 09

ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ள புதிய சட்டத்துக்கு அமைய, வீதிகளில் மேற்கொள்ளப்படும் குற்றங்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரத்தில் இருந்து புள்ளிகள் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சாரதிகள் செய்யும் 32 தவறுகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஓர் ஓட்டுநர் உரிமத்தில் 24 மதிப்பெண்கள் குறைக்கப்பட்டிருந்தால் அந்த உரிமம் இரத்து செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதி விபத்தை ஏற்படுத்தி விட்டு நிற்காமல் வாகனம் ஓட்டினால் ஓட்டுநர் உரிமத்தில் 10 புள்ளிகள் குறைக்க பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அதிவேக நெடுஞ்சாலைகளில் 150 கிலோ மீற்றருக்கு மேல் வேகத்தில் ஓட்டினால் 8 புள்ளிகள் குறைக்கப்படும். காப்பீட்டு சான்றிதழ் இல்லாமல் கவனக்குறைவாக வாகனம் ஓட்டினால் 6 புள்ளிகள் குறைக்கப்படும்.

இந்த முறையில் மதிப்பெண் குறைக்கும் முறை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்துக்கு அமைய, ஓட்டுநர் உரிமங்களில் இருந்து மதிப்பெண்கள் கழிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## பண்டாரநாயக்காவின் 124ஆவது ஜனனதின விழா!

கொழும்பு, ஜன. 09

முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவின் 124ஆவது ஜனன தின நிகழ்வு காலிமுகத்திடலில் நடைபெற்றது.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் அவரின் சகோதரி சிரானி பண்டாரநாயக்க உருவச்சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம மற்றும் கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். (ஐ)

# சிறீ லங்கன் எயார் லைன்ஸை தனியார் மயப்படுத்த வேண்டும்!

## மீள ஒரே வழி இதுவே என்கிறார் ஜனாதிபதி!

கொழும்பு, ஜன. 09

தனியார் மயப்படுத்தவேண்டிய - மறுசீரமைக்கவேண்டிய நிறுவனங்களாக சிறீ லங்கன் எயார் லைன்ஸ் இலங்கை மின்சார சபை, லங்கா மருத்துவமனை, ஹில்டன் கொழும்பு, சிறீ லங்கா ரெலிகோம், வோட்டர் எட்ஜ் ஆகியவை இனங்காணப்பட்டுள்ளன

இலங்கை மின்சார சபையின் நிலைமை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை விட மோசமாக உள்ளது என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறீ லங்கன் எயார்லைன்ஸை தனியார் மயப்படுத்துவதே ஒரே வழி என தெரிவித்துள்ளார்.

தனியார் மயப்படுத்துவதற்கு அல்லது மறுசீரமைப்பதற்கு அரசாங்கம் பல நிறுவங்களை அடையாளம் கண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தனியார் மயப்படுத்தப்படவுள்ள - மறுசீரமைக்கப்படவுள்ள அரச நிறுவனங்களின் பங்குகளை வைத்திருப்பதற்காக இந்த மாதத்தின் இரண்டாவது வாரத்தில் புதிய நிறுவனமொன்று ஏற்படுத்தப்படும்.

இலங்கைக்கு வழங்கப்படும் நிதிகள் நட்டங்களை ஈடுசெய்வதற்கு பயன்படுத்தக்கூடாது என்பதே நிதி வழங்குபவர்களின் முக்கிய கரிசனை என தெரிவித்துள்ள ஜனாதிபதி நிதி வழங்கும் சமூகத்தினர் தாங்கள் வழங்கும் நிதியை சுகாதார உற்பத்தி துறைகளில் பயன்படுத்த வேண்டும் என விரும்புகின்றனர். இதன் காரணமாக நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை அரசாங்கம் தொடர்ந்தும் கொண்டுசெல்ல முடியாது.

அரச துறையை அரசாங்கத்துக்கு சொந்தமான நிறுவனங்களை மறுசீரமைப்பது தொடர்பான உத்தேச திட்டம் குறித்து அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது.

சிறீ லங்கன் எயர்லைன்ஸ் எதிர்கொண்டுள்ள நஷ்டங்கள் காரணமாக அதனை தனியார் மயப்படுத்துவதே ஒரே வழி. இழப்புகளை சரிசெய்வதற்கு வேறு வழியில்லை. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஜனாதிபதி அதன் நஷ்டத்தை சரிசெய்வதற்கு செலவு பிரதிபலிப்பு விலைப் பொறிமுறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை பொறுத்தவரை கடனே அதன் பிரச்னை. கடனை திருப்பி செலுத்துவதற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஐந்து வருடங்களை கோரியுள்ளது. எனினும், இலங்கை மின்சார சபையின் நிலைமை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை விட மோசமாக உள்ளது. 20 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் நட்டம் ஏற்பட்டுள்ளது.

மின்வெட்டை அதிகரிப்பதா அல்லது மின் கட்டணத்தை அதிகரிப்பதா என்ற இரண்டில் ஒன்றை தெரிவு செய்யவேண்டியுள்ளது. மின் உற்பத்திக்காக நுரைச்சோலை மின் நிலையத்திற்கு நிலக்கரியை வழங்குவதில் எந்த பிரச்னையும் இல்லை.

இலங்கை மின்சார சபைக்கான திட்டங்கள் குறித்து பதிலளித்துள்ள ஜனாதிபதி அதற்கான திட்டங்கள் இடம்பெறுகின்றன நாடு எதிர்கொண்டுள்ள அந்நிய செலாவணி பிரச்னைக்கு தீர்வை காண்பதற்கு நாட்டிற்கான ஒரே வழி மறுசீரமைப்பே எனவும் தெரிவித்துள்ளார் - என்று சன்டே மோர்னிங்குக்கு அளித்த தகவலிலேயே அவர் இதனைக் கூறினார்.



## இ. போ. சவுக்கு 75 பஸ்கள் இந்தியாவால் அன்பளிப்பு!

கொழும்பு, ஜன. 09

“இலங்கையின் அசைவு இயக்கத்துக்கும் வாய்ப்புகளுக்கும் ஆதரவளித்தல்” எனும் கருப்பொருளின் கீழ் இலங்கை போக்குவரத்துச் சபையின் பாவனைக்காக 75 பேருந்துகளை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே கையளித்தார்.

இலங்கையின் பொதுப் போக்குவரத்து உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக இந்திய உதவின்கீழ் 500 பேருந்துகள் இலங்கைக்கு விநியோகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வெளிநாட்டு நன்கொடையாளர்கள் என்னையே அதிகம் நம்புகின்றனர்!

### எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஜன. 09

வெளிநாட்டு நன்கொடையாளர்கள் இலங்கையின் மற்றைய தலைவர்களை விட தன்னையே அதிகம் நம்புகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று தெரிவித்தார்.

கொழும்பு - நுகேகொடை - ஹாமாயா பாலிக வித்தியாலயத்துக்கு பேருந்து ஒன்றை அன்பளிப்பு செய்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “நான் பயன்படுத்தும் ஆங்கில வார்த்தைகளை புரிந்து கொள்ள முடியாது என்று சிலர் கூறுகிறார்கள். வெளிநாட்டு நன்கொடையாளர்களை நம்பிக்கை கொள்ள வைக்க சில வார்த்தைகளை பயன்படுத்துகிறேன். நன்கொடையாளர்களை நம்பிக்கை கொள்ள வைக்கும் திறமையால் என்னால் இந்த நிகழ்ச்சியை நடத்த முடிந்தது.



வெளிநாட்டு நன்கொடையாளர்களை நம்பவைக்கும் திறன்களைப் பயன்படுத்தி பாடசாலை மாணவர்களுக்காக மேலும் பல திட்டங்களை செயல்படுத்துவேன்.

எதிர்காலத்தில் பாடசாலை செல்லும் ஒவ்வொரு பிள்ளையும் கணினியை சொந்தமாக வைத்திருப்பார்கள்.

“எனவே வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்கு சிறந்த நபர் யார் என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். தற்போதைய ஜனாதிபதி வெளிநாட்டு உதவியை நாட்டுக்கு கொண்டு வருவார் என்று அனைவரும் நினைத்தார்கள், ஆனால் அவர் தோல்வியுற்றவர் என்பதை நிரூபித்துள்ளார்,” என்றார். (ஐ)

## மகிந்த, நிமால் குழுவினர் தனித்து போட்டியிட முடிவு

கொழும்பு, ஜன. 09

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட அமைச்சர் மகிந்த அமரவீர உள்ளிட்ட குழுவினர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட தீர்மானித்துள்ளனர்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவோ அல்லது வேறு எந்தக் கட்சியின் சின்னத்திலோ தங்கள் அணி களமிறங்கப்போவதில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பதவி நீக்கப்பட்ட அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான 9 உறுப்பினர்களைக் கொண்ட குழுவினரும் இதற்கு இணங்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

அமைச்சு பதவிகளை ஏற்றுக்கொண்டதாக தெரிவித்து நிமால் சிறிபால டி சில்வா, மகிந்த அமரவீர, துமிந்த திஸநாயக்க, சாமர சம்பத் தசநாயக்க உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் 9 பேரும் சிறீ லங்கா சுதந்திர கட்சியில் வகித்த பதவிகளிலிருந்து அண்மையில் நீக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேர்தல்கள் ஆணைக்குழு இன்று கூடி உரையாடல்!

கொழும்பு, ஜன. 09

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவது தொடர்பிலான ஆணைக்குழுவின் செயல்பாடுகள் மற்றும் அடுத்த கட்ட செயல்பாடுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 11ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வருமாறு அனைத்து கட்சிகளின் செயலாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சீனா அன்பளித்த டீசலை பகிரும் பணி இன்று ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 09

சீனாவால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள 69. 8 இலட்சம் லீற்றர் டீசல் இன்று திங்கட்கிழமை முதல் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாய அமைச்சு உருவாக்கியுள்ள செயலி மூலம், டீசலைப் பகிர்ந்தளிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த செயலி மூலம், விவசாயிகளின் தொலைபேசிகளுக்கு வவுச்சர் படிவம் ஒன்று கிடைக்கப்பெறும். அதனூடாக, இலங்கை பெற்றோலியக் கூட்டத்தாபனத்துக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில், குறித்தொதுக்கப்பட்ட டீசல் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ள அறுவடைப் பணிகளுக்காக, இவ்வாறு டீசல் விநியோகிக்கப்படவுள்ளது. (ஐ)

# கோவிட் தொற்றுக்கு தங்களை வலிந்து உள்ளாக்கி கொள்ளும் சீன இளைஞர்கள்!



சீனாவில் வசித்துவரும் சென் என்பவரின் 85வயது தந்தை கடந்த டிசம்பர் மாதம் கோவிட் தொற்றுக்கு உள்ளானார். ஆனால் அவரது சிகிச்சைகாக உடனடியாக ஆம்புலன்ஸ் கிடைப்பதோ அல்லது உரிய மருத்துவரிடம் சிகிச்சை பெறுவதோ சாத்தியமற்றதாக இருந்தது.

பெய்ஜிங்கில் உள்ள சயாங்க் மருத்துவமனைக்கு அவர்கள் சென்றனர். ஆனால் அவர்களை "மருத்துவமனை தாழ்வாரத்தில் அமர்ந்து ஐ.வி டிரிப்ஸ் ஏற்றிக் கொள்ளுங்கள் அல்லது வேறு மருத்துவமனைக்குச் சென்றுவிடுங்கள்" என்று அந்த மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. கோவிட் தொற்றுக்கு சிகிச்சை அளிப்பதில் இதுதான் சீனாவின் இன்றைய நிலையாக உள்ளது.

"சிகிச்சைக்குத் தேவைப்படும் படுக்கை வசதிகளோ, சுவாச மீட்பு கருவிகளோ, மற்ற எந்த ஒரு மருத்துவ சாதனங்களோ அந்த மருத்தவமனையில் காணப்படவில்லை" என்கிறார் தனது 85 வயது தந்தையை சிகிச்சைக்கு அழைத்துச் சென்ற சென்.

அதன்பின் ஒருவழியாக தங்களுக்குத் தெரிந்தவர்களின் மூலம் மற்றொரு மருத்துவமனையில் தனது தந்தைக்கு சிகிச்சைகாக இடம் கிடைத்ததாகவும் ஆனால் அப்போது அவருக்கு தீவிரமான நுரையீரல் தொற்று ஏற்பட்டுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது தனது தந்தை தொற்றிலிருந்து மீண்டு வந்துவிட்டாலும், வரும் காலத்தில் அவருக்கு மீண்டும் தொற்று ஏற்படும் சூழலில் அது அவரது உயிரைக்கூட பறித்துவிடலாம் எனவும் சென் கவலை கொள்கிறார்.

மேலும் அவர் கூறுகையில், "மூன்று ஆண்டுகளாக கோவிட் தொற்றை கட்டுப்படுத்துவதற்காக சீனாவில் மேற்கொள்ளப்பட்டு வந்த அனைத்து கட்டுபாட்டு விதிகளும் பெரும் தோல்வியைத் தழுவியுள்ளன. எந்தவொரு முன் ஆயத்தப்பணிகளும் ஏற்பாடுகளும் இல்லாமல் தற்போது சீன அரசு கோவிட் கட்டுபாடுகளைத் தளர்த்தியுள்ளது.




இது யாரும் எதிர்பாராத வகையில் மீண்டும் தீவிர நோய்ப் பரவல் ஏற்படுவதற்குக் காரணமாக அமையப் போகிறது. இதனால் முதியவர்கள் தங்களது வாழ்நாட்களை எண்ண வேண்டிய சூழல் ஏற்படும் என்று தனது வருத்தத்தைத் தெரிவிக்கிறார் சென்.

சர்வதேச போக்குவரத்தைத் தொவங்குவதற்காக சீன அரசு நேற்று ஞாயிற்றுக்கிழமை (ஜனவரி 8) முதல் தங்களது ஜீரோ-கோவிட் கட்டுபாடு விதிகளைத் திரும்ப பெறுகிறது. இதைத் தொடர்ந்து சீனாவின் எல்லைகள் திறக்கப்படுகின்றன. எந்தவொரு தெளிவான திட்டமிடலும் இல்லாமல் சீன அரசு மேற்கொள்ளும் இந்த நடவடிக்கையால் பெரும்பான்மையான சீன குடும்பங்கள் அச்சத்தில் உள்ளன.

ஆனால் அதேநேரம் சீனாவின் இளைஞர்கள் இதை மாற்றுகோணத்தில் பார்க்கின்றனர். தங்களது பெயர்களைக் குறிப்பிட விரும்பாத சில இளைஞர்கள் நம்முடன் பேசுகையில், தாங்கள் வேண்டுமென்றே தங்களை கோவிட் தொற்றுக்கு உள்ளாக்கிக் கொள்வதாக கூறுகின்றனர்.

ஷாங்காய் நகரைச் சேர்ந்த 27 வயது இளைஞர் ஒருவர் தன்னை வேண்டுமென்றே கோவிட் தொற்று பாதிப்புக்கு உள்ளாக்கிக் கொண்டார்.

"நான் எனது விடுமுறைக் கால திட்டத்தை மாற்றி கொள்ள விரும்பவில்லை. எனது விடுமுறை நாட்களின் போது எனக்கு தொற்று ஏற்பட்டுவிட்டால் என்னால் அந்த நாட்களை முழுமையாகக் கொண்டாட முடியாமல் போய்விடும். அதனால் நான் இப்போதே என்னை கோவிட் தொற்றுக்கு உள்ளாக்கிக் கொண்டேன்.

இதனால் விடுமுறை நாட்கள் வருவதற்கு முன்பாகவே நான் குணமடைந்து விடுவேன். மேலும் விடுமுறை கொண்டாட்டத்தின்போது எனக்கு மீண்டும் தொற்று ஏற்படாது" என்று கூறும் அந்த இளைஞர், "அதேசமயம் தொற்று ஏற்படுத்திக் கொண்ட பின் தனக்கு ஏற்பட்ட



கடுமையான தசைவலியை எதிர்ப்பார்க்கவில்லை என்றும் தொற்றுக்குரிய பாதிப்புகள் அதிகமாகக் காணப்பட்டது" என்றும் குறிப்பிடுகிறார்.

ஷாங்காய் நகரைச் சேர்ந்த மற்றொரு 26 வயது இளம்பெண் ஒருவர் பேசுகையில், "தனக்கு கோவிட் தொற்று ஏற்பட வேண்டுமென்பதற்காக ஏற்கெனவே தொற்று பாதிப்புக்கு உள்ளான தனது தோழியைச் சந்திக்கச் சென்றதாக" கூறுகிறார்.

ஆனால் தான் "எதிர்பார்த்தைவிட அதிகமான பாதிப்புகளை கோவிட் தொற்று தனக்கு ஏற்படுத்தியது, அதிலிருந்து மீண்டு வருவது கடுமையாக இருந்தது," என்று அந்தப் பெண் கூறுகிறார்.

"சாதாரணமாக சளி ஏற்படுவதைப் போன்றுதான் இருக்குமென நினைத்தேன், ஆனால் அது வலி மிகுந்ததாக இருந்தது" என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

வடக்கு ஷெஜியாங் மாகாணத்தில் உள்ள ஜியாஷிங் பகுதியில் அரசு நடத்தி வரும் தொழிலில் பணிபுரிந்து வரும் 29 வயது பெண் ஒருவர், "நாட்டின் எல்லைகள் மீண்டும் திறக்கப்படும் செய்தி அறிந்ததும் தான் மிகவும் ஆச்சரியமடைந்ததாகவும் சீனாவின் பல்வேறு பகுதிகளுக்குப் பயணம் செய்வதற்குத் தான் ஆயத்தமாகி வருவதாகவும்" கூறுகிறார்.

வாழ்க்கையின் இயல்பான நாட்கள் மீண்டும் வர வேண்டுமெனக் கூறும் அவர், அதேநேரம் முதியவர்களின் நிலை குறித்து தனது வருத்தத்தையும் தெரிவிக்கிறார். தனது தாத்தா கோவிட் தொற்றுக்கு உள்ளாகி கவலைக்கிடமான நிலைக்குச் சென்றபோதுகூட அவர் மருத்துவமனைக்குச் செல்ல மறுத்துவிட்டார்.

"அதற்குக் காரணம் மருத்துவமனைகளின் நிலை மிகவும் மோசமானதாக இருந்தது. அங்கே உயிரிழந்தவர்களுடைய சடலங்களின் எண்ணிக்கை நிரம்பி வழிந்து கொண்டிருந்தது எங்களது கவலையை அதிகரித்தது" என்கிறார் அவர்.

தான் கோவிட் தொற்றுக்கு உள்ளாக விரும்பவில்லை என்று கூறும் அவர், தனது கணவருக்கு தொற்று ஏற்பட்ட நேரத்தில் தூங்கும்போதுகூட தான் முகக்கவசம் அணிந்துகொண்டு தூங்கியதாக அவர் கூறுகிறார்.

இந்த நிலையில் சீனாவில் இயல்புநிலை திரும்பி விட்டதாக சீன அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வரும் "குலோபல் டைம்ஸ்" செய்தித் தாள் அறிவித்துள்ளது.

ஆனாலும் கூட இதுவோர் அசாதாரணமான இயல்பு நிலையாகவே பெரும்பான்மையான மக்களால் பார்க்கப்படுகிறது.

சீனாவை சேர்ந்த மற்றொரு பெண் லூயி. அவருடைய கணவர் கடுமையான சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டுள்ளதால் அவர் இதுவரை கோவிட் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளவில்லை. ஆனால் "வீட்டை எப்போதும் சுத்தமாகப் பராமரித்து வந்தபோதும் நாங்கள் இருவரும் கோவிட் தொற்றுக்குப் பாதிக்கப்பட்டோம்," என்கிறார்.

தங்களது மகளுக்கும் தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்து, தொற்று பாதிப்பிலிருந்து மீள்வதற்காக Paxlovid, Pfizer's போன்ற மருந்துகளை பெய்ஜிங்கின் பல இடங்களில் தேடியதாகவும் இறுதியில் கள்ளச்சந்தையில் அதிகப் பணம் கொடுத்து அந்த மருந்துகளை தாங்கள் பெற்றதாகவும் லூயி கூறுகிறார்.

அதேபோல் பெய்ஜிங்கை சேர்ந்த வாங் என்னும் மற்றொரு பெண், Paxlovid மருந்துகள் சந்தையில் அதிக விலைக்குச் செல்வதற்கு முன்பாக தான் அந்த மருந்துகளை மொத்தமாக வாங்கி வீட்டில் வைத்துவிட்டதாகத் தெரிவிக்கிறார்.

கோவிட் கட்டுபாடுகளை திரும்பப் பெற்றிருப்பது நாட்டின் பொருளாதாரத்திற்கு வேண்டுமானால் நன்மை சேர்க்கலாம் என்றும் அந்தப் பெண் குறிப்பிடுகிறார்.

ஆனால் சீனாவின் நகரப் பகுதிகளைத் தவிர்த்து கிராமப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அரசின் இந்த அறிவிப்புக்கு எப்படி எதிர்வினை ஆற்றுகிறார்கள்



என்பதை அறிவது சற்று கடினமாக இருக்கிறது.

"மோசமான இந்த கோவிட் தொற்றை கட்டுப்படுத்துவதற்காக ஜீரோ-கோவிட் கட்டுப்பாட்டு முறையை அறிவித்தனர். மூன்று ஆண்டுகளாக அது நடைமுறையில் இருந்த நிலையில் தற்போது திடீரென அதை மொத்தமாகத் திரும்ப பெறுவது எந்த மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தப்போகிறது எனத் தெரியவில்லை. படிப்படியாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கலாம்" எகிறார் 52வயதான பெய்ஜிங்கை சேர்ந்த பெண் லீ.

"2022ஆம் ஆண்டு எங்களுக்கு மிகவும் மோசமான ஓர் ஆண்டாக இருந்தது. இப்போது நாங்கள் கடவுளிடம் வேண்டிக்கொள்வது எல்லாம் 2023ஆம் ஆண்டு அதைவிட மோசமாக அமைந்துவிடக் கூடாது என்பது மட்டுமே" என்று கவலையுடன் கூறுகிறார் லீ.

(பிபிசி)



# போதையால் சீரழியும் இளம் சமூகம்...!



## நேர்வழிப்படுத்துவதில் இந்து மன்றங்களின் வகிபாகம்!

மனித வாழ்வில் மாணவப்பருவம் என்பது மிக முக்கியமானது. இன்று மாணவ சமுதாயம் தம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளிலிருந்து மீண்டு வர வழிவகை தெரியாது அல்லற்படுகின்றனர். இன்று எமது இளைய சமுதாயம் போதைப்பொருள் பாவனையால் சின்னாபின்னமாகிச் சீரழிந்து கொண்டிருக்கிறது. இதனால் இளம் சந்ததியினர் பலர் சமூகத்தின் சவாலாக அமைந்து காணப்படுகின்றனர்.

"அரிது அரிது மானிடராதல் அரிது
அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல்
அதனிலும் அரிது ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது"

என்று மானிடப்பிறவி பற்றியும் கல்வியின் பெருமை பற்றியும் ஔவைப் பிராட்டி அழகாக எடுத்தியம்பியுள்ளார். இன்று மனித மனங்களை மயக்கி, மதியை முடக்கி ஆற்றலை அழித்து இறுதியில் உடலையும் அழிக்கும் ஒருவகைக் கறையானான போதைவஸ்துக்கு அடிமையாகி இருக்கும் எம் இளைய சமுதாயத்தைப் பார்க்கும் போது ஔவைப் பிராட்டியின் பாட்டுடன்

"ஞாலமும் கல்வியும் நயந்த காலை
போதையிலும் மூழ்காதிருத்தல் அதனிலும் அரிது"

என்பதனையும் சேர்த்துக் கொள்ளலாம் போல் சொல்லத் தோன்றுகிறது. போதையின் கோரத்தாண்டவம் கொலை, களவு,கற்பழிப்பு ஆகிய தீய செயல்களுக்கு எமது மாணவ சமுதாயத்தை இட்டுச் செல்கிறது. இன்றைய இளைஞர்கள் தோல்வியைத் தாங்க முடியாதவர்களாகவும், சவால்களை எதிர்கொள்ளத் தயங்குபவர்களாகவும், விரக்தி மனப்பான்மை கொண்டவர்களாகவும் சமய நம்பிக்கை அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இதன் விளைவால் அவர்கள் போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையாகின்றனர். தற்போது பெண்களும் போதைப் பொருளுக்கு அடிமையாகி வருகின்றனர். உடலுக்கு மன எழுச்சியையும் புத்துணர்வினையுந் தந்து மனமாற்றத்தைத் தரும் எனக் கருதிப் போதைக்கு அடிமையாகின்றனர். கூடுதலான உணர்ச்சியை (வெறியை) ஏற்படுத்துவதால் இப்போதைப்பொருட்கள் சவால்களை எதிர்கொள்ளும் மனப்பான்மையை வளர்க்கும் என எண்ணுகின்றனர். இதனால் குறுக்கு வழியில் இன்பம் அனுபவிக்கத் தலைப்பட்டுப் போதைப்பொருளை உட்கொள்கின்றனர். இதன் எதிர்கால விளைவுகளைப் பற்றிப் பாடசாலைப் பருவப் பிள்ளைகள் சிந்திப்பது குறைவாகவே உள்ளது.

"முகத்தின் ஒளியை மூடிய சிப்பியைப் போல"

இவர்கள் மனதையும் மதியையும் அறியாமை மற்றும் போதைத்தனம் போன்றவை மூடியுள்ளன. மனமானது,

"குரங்கு கிளைக்குக் கிளை தாவுவது போல"

பல்வேறு பட்ட எண்ணங்களால் மாறிக் கொண்டிருக்கிறது. ஏமாறுபவனும் ஏமாற்றப் படுவோரும் இருந்தால் ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள் என்பதற்கு இணங்க, இன்றைய இளைய தலைமுறையினரைத் தன் வழியில் விழுத்தி அவர்களுக்கும் அவர்களது இல்லத்தார்க்கும், பாடசாலைக்கும், நாட்டிற்கும் தலையிடியாகப் போதைப்பொருள் பாவனை விளங்கிறது. இளைய தலைமுறையினரை இலக்கு வைத்து அவர்களைப் போதைவஸ்துப் பாவனைக்கு உட்படுத்தினால் தான் எதிர்காலத்தில் பெரிய சந்தை வாய்ப்பு தமக்கு கிடைக்குமென்று கொடிய போதைவஸ்து அரக்கர்கள் எண்ணிச் செயற்படுகின்றனர். இதனால் இவர்கள் இளைஞர்களை வலுவாகப் பற்றிக் கொண்டு இவர்களின் பலவீனத்தைத் தமது பலமாக்கிச் செயற்பட்டு வருகின்றனர். மனுக்குலத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் இத்தகு சமூக விரோதிகளின் சதித் திட்டங்களை முறியடித்து போதைவஸ்துகள் அற்ற ஒளிமயமான எதிர்காலத்தைப் புலர வைக்க ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமானதொன்றாகும்.

போதைப்பொருள் பாவனையில் சிக்கியவர்களை அவற்றின் பிடியிலிருந்து மீட்க எமது மாமன்ற கிளைச் சங்கங்களும், ஏனைய சமய நிறுவனங்களும் சமூகமும் இணைந்து, தக்க நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும். நண்பர்களும் குடும்பத்தினரும் இணைந்து உங்கள் பிரதேச சூழலுக்கு ஏற்ப நடவடிக்கைகளை எடுத்து அவர்களைத் திருத்த முயல வேண்டும். அப்படிச் செய்யும் போது அவர்கள் திருந்துவதோடு அது உங்கள் பிரதேசங்களையும், நாட்டையும், அதனுடன் இணைந்த சமுதாயத்தையும் புனிதமாக்கும். பாடசாலை மாணவர்களிடையே இப்பழக்கமுண்டு என அறிந்தால் அதனைத் தடுக்க உடன் நடவடிக்கைகளை எடுங்கள். இவ்விடத்தில் பாடசாலையிலிருந்து விலகியிராதீர்கள்.

நெருங்கியிருங்கள். பாடசாலைக்கு இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கச் சில வேளைகளில் நிதி வசதியில்லாதிருக்கலாம். அதற்கு உங்கள் அமைப்பினூடாகவோ அல்லது நலன் விரும்பிகளிடமிருந்தோ, வர்த்தக பிரமுகர்களிடமிருந்தோ பெற்று அவர்களுக்குக் கொடுத்து உதவுங்கள். பாடசாலையின் கட்டுக்கோப்புக்குள் நிர்வாகத்தில் எத்தலையீடுமின்றிப் பாடசாலையுடன் ஒட்டி உறவாடி மாணவர்களைக் காப்பாற்றுங்கள். பாடசாலையிலும் அதனைச் சூழ்ந்த இடங்களிலும் போதையைத் தடுப்பதற்கான சில ஆலோசனைகள்

- போதை ஏற்படுத்தும் கெடுதல்கள் பற்றியும் அவற்றிலிருந்து விலகியிருப்பதையும் காட்டும் விழிப்புணர்வு தொடர்பான பதாதைகளைக் காட்சிப்படுத்தல்
- மாணவர்களுக்கிடையே போதைப் பொருள் ஒழிப்புத் தொடர்பான ஓவியப் போட்டிகள் நடாத்துவித்தல்
- பாடசாலையின் முக்கிய ஒரு தினத்தில் போதை ஒழிப்புத் தொடர்பான நடைபவனியை ஏற்பாடு செய்தல்
- போதைப் பொருள் ஒழிப்புத் தொடர்பான கையேடுகளை மாணவர்களுக்கும் சூழ உள்ள சமூகத்திற்கும் வழங்க நடவடிக்கை எடுத்தல்
- புகைத்தல் ஒழிப்பு தினத்தை நடாத்துதல்
- புகைத்தல் மற்றும் போதைப் பொருட்களால் ஏற்படும் உடல் உளமாற்றம் பற்றிய படக்காட்சிகளைக் காட்டி விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல்
- போதைப் பொருட்களிலிருந்து எமது சமூகத்தைப் பாதுகாப்போம் என்ற வாசகங்களை வகுப்பறைகளிலும், பாடசாலைச் சூழலிலும், பாடசாலை சுற்று மதில்களிலும் சமூகத்தின் பார்வைக்காகப் பாடசாலையைச் சூழ உள்ள பிரதேசங்களிலும் காட்சிப்படுத்தல்
- மாணவர்களுக்கிடையே போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பான கட்டுரைப் போட்டியை நடாத்துதல்
- போதைக்கு எதிரான பாடசாலையின் பலம் என்ற நிலையில் பேச்சுப் போட்டியை நடாத்துதல்
- போதைப் பொருளற்ற புத்திசாலிப் பிள்ளைகளைக் கொண்டு எமது பாடசாலை என்பது போன்ற வாசகத்தைப் பாடசாலையில் பொறிக்க நடவடிக்கை எடுத்தல்
- போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பான குறும் படம் நாடகம் என்பவற்றைத் தயாரித்து மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் காட்சிப்படுத்தல்
- போதைப் பொருள் தொடர்பான தெருக்கூத்துக்களை ஏற்பாடு செய்து விழிப்புணர்வை ஏற்படுத்தல்

இவை போன்ற செயற்பாடுகளையும் இது போன்று வேறு செயற்பாடுகளையும் செய்வதனூடாகப் போதையைக் கட்டுப்படுத்தலாம். அழகியல் (சங்கீதம், நடனம், சித்திரம், புல்லாங்குழல், வீணை, மிருதங்கம் போன்ற பாடங்கள்) பாடங்களும் மனதை ஒரு வழிப்படுத்தி மனம் கெட்ட வழியில் செல்லவிடாது தடுக்கும். ஆன்மீக எண்ணங்கள் உருவாகும். மனம் அமைதியாக இருக்கும். விரக்தி எண்ணங்கள் உருவாகாது. உங்கள் பிரதேசங்களில் பாடசாலை மாணவர் முதல் ஏனையவர்களும் இப்பாடங்களைக் கற்க நடவடிக்கை எடுங்கள்.

"போதையற்ற உலகை உருவாக்குவதற்குத் தர்மத்தை செய் - "வாழ்வதற்காகத் திரைகடல் ஓடியும் திரவியம் தேடு -, "இன்பமாக வாழ் -, "முத்திப்பேற்றை அடை - , "மது அற்ற நிரந்தர வையகம் என்ற தாமரை வளர வேண்டும் - என்ற போதனையைச் செய்வதனூடாகவும் இதனை ஒழிக்க முயற்சிக்கலாம்.




போதைப்பொருள் பாவனையால் எமது சமூகம் சீரழிந்து கொண்டிருப்பது மறுக்க முடியாத உண்மை. இதற்கு அடிமையானவர்கள் தமது வாழ்க்கையை இழப்பதுடன் தம்மைச் சார்ந்து இருப்பவர்களின் வாழ்வையும் படுகுழியில் தள்ளுகின்றனர். எம்மையும் எமது வருங்கால சமூகத்தையும் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும் என்று உணர்ந்து செயற்படுங்கள். சட்டமுறைகளை இறுக்கமாக்கித் தவறு செய்யும் அதிகாரிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டனையைப் பெற்றுக் கொடுங்கள். போதைப் பொருள் விற்பவர்களைச் சட்டத்தின் மூலம் கைது செய்து சிறையிலடைக்க உதவி செய்தீர்களானால் இக்குற்றச் செயல்கள் குறைவடைய வாய்ப்புண்டு.

**திரு. வே.கந்தசாமி**
பொதுச் செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம்

# ரஜினி, அஜித், விஜய் தமிழ் சினிமாவின் சூப்பர் ஸ்டார் யார்?






பொங்கல் வெளியீட்டிற்கு விஜய்யின் வாரிசு - அஜித்தின் துணிவு படங்கள் தயாராக உள்ள நிலையில், நடிகர் விஜயை முன்னிறுத்தி தமிழ் சினிமாவின் சூப்பர் ஸ்டார் யார் என்ற சர்ச்சை வெடித்துள்ளது. இதனால், பேஸ்புக், ட்விட்டர், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைதளங்களை ரஜினி, விஜய், அஜித் ரசிகர்கள் விவாத மேடையாக மாற்றியுள்ளனர்.

தமிழ் மக்களின் உணர்வோடு பின்னிப் பிணைந்துவிட்ட சினிமாத் துறையில் வசூல் சக்கரவர்த்தியாக திகழும் நடிகருக்கென்று எப்போதும் சிறப்பிடம் உண்டு. தியாகராஜ பாகவதர், எம்.ஜி.ஆர். வரிசையில் அந்த இடத்தை நடிகர் ரஜினிகாந்த் எட்டிப் பிடித்தார். சினிமாத் துறையிலும், மக்களாலும் சூப்பர் ஸ்டார் என்று கொண்டாடப்பட்டார். 4 தசாப்தங்களுக்கும் மேலாக முன்னணி நடிகராக தொடர்கிறார்.

தமிழ்த் திரையுலகில் தியாகராஜ பாகவதர் காலத்திற்குப் பிறகு எம்.ஜி.ஆரும், எம்.ஜி.ஆர். காலத்திற்குப் பிறகு ரஜினியும் வசூல் சக்கரவர்த்தியாக உயர்ந்ததால் அந்தந்த கால கட்டங்களில் இதுகுறித்த சர்ச்சை பெரியளவில் எழவில்லை.

ஆனால், தற்போது ரஜினிகாந்த் தொடர்ச்சியாக படங்களில் நடித்துக் கொண்டு, சினிமாவில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் போதே அவரது இடத்தை நடிகர் விஜய் பிடித்து விட்டார் என்ற கூறப்படுவதே சர்ச்சையின் தொடக்கப்புள்ளி.

ஜில்லா - வீரம் படங்களுக்குப் பிறகு 9 ஆண்டுகள் கழித்து, மீண்டும் ஒரே பொங்கலில் விஜய் - அஜித் நடிப்பில் வாரிசு - துணிவு படங்கள் வெளியாகும் சூழலில், வாரிசு படத் தயாரிப்பாளர் தில் ராஜூவின் பேச்சே இந்த சர்ச்சைக்கு வித்திட்டது.

துணிவு படத்தை உதயநிதி ஸ்டாலினின் ரெட்ஜெயன்ட் நிறுவனம் தமிழ் நாடு முழுவதும் விநியோகிக்கும் உரிமையை பெற்றிருப்பதால், அந்த படத்திற்கே அதிக திரையரங்குகள் கிடைக்கக் கூடும் என்று கூறப்பட்ட போது, தில்ராஜூவின் சர்ச்சைக்குரிய அந்த பேட்டி வெளியானது.

அஜித்தை விட விஜயே பெரிய ஸ்டார் என்பதால் வாரிசு படத்திற்கு அதிக திரையரங்குகளை ஒதுக்க வேண்டும் என்ற அவரது பேச்சு திரையுலகிலும், ரசிகர்கள் மத்தியிலும் சலசலப்பை ஏற்படுத்தியது. ரஜினியின் சாதனைகளை பட்டியலிட்டு அன்றும் இன்றும் என்றும் அவர்தான் சூப்பர் ஸ்டார் என்று அவரது ரசிகர்கள் பதிவிட, சமூக ஊடகங்களில் விவாதம் பற்றிக் கொண்டது.

வாரிசு பட இசை வெளியீட்டு விழாவில் பேசிய நடிகர் சரத்குமார், “விஜய் தான் எதிர்காலத்தில் சூப்பர் ஸ்டார் என்று சூர்ய வம்சம் படத்தின் 175வது நாள் விழாவில் நான் சொன்னேன். தற்போது அது நடந்து விட்டது. விஜய் தான் சூப்பர் ஸ்டார்,“ என்று குறிப்பிட்டு, ரசிகர்களின் மோதலுக்கு நெய் வார்த்தார்.

இதன் தொடர்ச்சியாக, யூடியூப் தளம் ஒன்றில் பேசிய சினிமா விமர்சகரும், பத்திரிகையாளருமான பிஸ்மி, வாரிசு படத் தயாரிப்பாளர் தில்ராஜூவின் பேச்சை ஆமோதித்தார்.

“தமிழ் சினிமாவில் இன்றைய சூழலில் வசூல் ரீதியாக நடிகர் விஜயே நம்பர் ஒன்“ என்ற அவரது பேச்சால் எரிச்சலடைந்த ரஜினி ரசிகர்கள், நேரடியாகவே அவருடன் வாக்குவாதம் செய்ததும், பின்னர் அதற்காக வருத்தம் தெரிவித்த நிகழ்வுகளும் அரங்கேறின.

ரஜினி ரசிகர்களின் செயலை இயக்குநரும், நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளருமான சீமானும் கண்டித்தார்.

“இன்றைய தலைமுறையினர் பெருமளவு விரும்பத்தக்கவராக தம்பி விஜய் உச்சத்தில் இருக்கிறார். இந்த எதார்த்த சூழலை விளக்கி கருத்துகளை பகிர்ந்து கொண்டதற்காக சகோதரர் பிஸ்மியை அச்சுறுத்த முனைந்த ரஜினிகாந்த் ரசிகர்களின் செயல் நாகரீகமானதன்று,“ என்று அவர் அறிக்கையும் வெளியிட்டிருந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற “இரும்பன்“ பட இசை வெளியீட்டு விழாவிலும் சீமான், “தமிழ் சினிமாவில் இன்றைய சூப்பர் ஸ்டார் விஜய்தான்“ என்ற தனது கருத்தை மீண்டும் உறுதிபடத் தெரிவித்தார். மறுபுறம், நடிகர் சரத்குமார், சூப்பர் ஸ்டார் குறித்த தனது பேச்சுக்கு புதிய விளக்கத்தை அளித்துள்ளார்.

யூடியூப் சேனல் ஒன்றிற்கு அளித்த பேட்டியில், “விஜயின் வளர்ச்சியை வைத்து அவர் சூப்பர் ஸ்டாராக வருவார் என்று சூர்ய வம்சம் படத்தின் வெற்றி விழாவில் கூறியதாக வாரிசு இசை மேடையில் சொன்னேன். ஆனால், ரஜினிகாந்த் சூப்பர் ஸ்டார் இல்லை என்றும், அஜித் குமார் சூப்பர் ஸ்டார் இல்லை என்றும் நான் ஒருபோதும் சொல்லவே இல்லை,“ என்று அவர் விளக்கம் அளித்துள்ளார்.

சமூக வலைதளங்களில் சூப்பர் ஸ்டார் யார் என்ற விவாதம் சூடாக நடந்து கொண்டிருக்க, மறுபுறம் யூடியுப் தளத்தில் வாரிசு - துணிவு ஆகிய இரு படங்களின் டிரைலர்களுமே ரசிகர்களின் பெரும் வரவேற்புடன் டிரெண்டிங்கில் நீடிக்கின்றன.

இரு படங்களுமே ஜனவரி 11-ம் தேதி அதிகாலையில் திரைக்கு வருகின்றன. திரையரங்குகளில் இதற்கான முன்பதிவு தொடங்கிவிட்ட நிலையில், வெளியீட்டையும் கொண்டாட விஜய், அஜித் ரசிகர்கள் இப்போதே தயாராகி வருகின்றனர். •

**09.01.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

**09.01.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சாணக்கியனுக்கு பதவியா? வீண் புரளி கிளப்பாதீர்கள்!

## அரியநேத்திரன் தெரிவிப்பு

நிந்தவூர், ஜன. 09

இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டு உப தலைவர் பதவிக்கு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் நியமிக்கப்பட வுள்ளாரென வெளியான தகவல்கள் உண்மைக்குப் புறம்பானதும் விசமத்தனமானது மென இலங்கை தமிழரசுக் கட்சியின் ஊடக செயலாளர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தற்போதய சிரேஷ்ட உப தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பிர் பொன் செல்வராசா பதவி விலகவுள்ளார் என்றும், அந்தப் பதவிக்கே, பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நியமிக்கப்படவுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயல்குழுக் கூட்டம் களுவாஞ்சிக்குடியில் இடம்பெற்ற தினம் சில ஊடகங்களிலும், சமூகவலைதளங்கள் மற்றும் இணையங்களிலும் இது தொடர்பான செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

மத்திய செயல்குழுக் கூட்டத்தின் போது சிரேஷ்ட உப தலைவர் பொன். செல்வராசா தமது பதவி விலகலை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளார் எனவும் அச் செய்திகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்த விவகாரம் தொடர்பில் ஊடகச் செயலாளர் அரியநேத்திரன் கருத்து வெளியிடுகையில்,

இது வீண்புரளி என்பதுடன் சிறுபிள்ளைத்தனமானதும், உண்மைக்கு புறம்பான விஷமத்தனமான தகவலெனவும் விசனம் தெரிவித்தார். கட்சி யாப்பின்படி பொதுச்சபையின் அங்கீகாரத்துடனேயே பதவி நியமனங்கள் வழங்கப்பட முடியும். மத்திய செயல்குழுவில் இதற்கான வாய்ப்பில்லை என வும் சுட்டிக்காட்டிய ஊடகச் செயலாளர் அரியநேத்திரன், எமது சிரேஷ்ட உப தலைவர் பொன். செல்வராசா பதவி விலகவில்லை. அத்தகைய உத்தேசம் அவருக்கு இல்லை. இப்போதும் அவர் சிரேஷ்ட உப தலைவர்தான் என்றும் கூறினார்.

எனினும் தனது சுகயீனம் காரணமாக கட்சியால், மட்டக்களப்பு மாவட்டம் தொடர்பில் வழங்கப்பட்ட பொறுப்பு ஒன்றிலிருந்தே அவர் விலகவுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ -06)



# செல்வராசாவை மருத்துவமனையில் பார்வையிட்டார் தமிழரசு தலைவர்!

நிந்தவூர், ஜன. 09

சுகயீனமுற்றிருக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவருமான பொன். செல்வராசாவை, இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா நேரில் சென்று பார்வையிட்டார்.

சுகயீனம் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ள கட்சியின் மூத்த துணைத்தலைவர் செல்வராசாவை, இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளைத்தலைவர் கே. வி. தவராசா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் ஆகியோர் சகிதம் சென்று தலைவர் மாவை பார்வையிட்டார்.

அவரின் உடல்நலன் குறித்து கேட்டறிந்த அவர்கள், அவருக்கு ஆறுதலும் தெரிவித்துக் கொண்டனர்.

களுவாஞ்சிக்குடியில் நேற்று முன்தினம் இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயல்குழுக் கூட்டம் நடந்தது. இது முடிவுடைந்ததும் தலைவர் மாவையும் ஏனைய இருவரும் சென்று பார்வையிட்டனர். (ஐ-06)

# ஊடகவியலாளர் லசந்தவுக்கு மட்டக்களப்பில் நேற்று அஞ்சலி!



மட்டக்களப்பு, ஜன. 09

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் 14 ஆவது நினைவு தினம் மட்டக்களப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு ஊடக ஊடக அமைப்பின் தலைவர் வ. கிருஷ்ணகுமார் தலைமையில் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக அமைந்துள்ள உயிரிழந்த ஊடகவியலாளர் நினைவுத்தூபியில் இந்நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

உயிரிழந்த ஊடகவியலாளர் லசந்த விக்கிரமசிங்கவின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு தீபச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டுள்ளது.

சிரேஷ்ட ஊடகவியலாளரான லசந்த விக்கிரமதுங்க சண்டே லீடர் பத்திரிகையின் தலைமை ஆசிரியராக இருந்த போது இனந்தெரியாதாரோல் 2009 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார்.

நேற்றைய நினைவேந்தல் நிகழ்வில் ஊடகவியலாளர்கள், மதகுருமார்கள், அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# சவூதி விபத்தில் ஏறாவூர் இளைஞர் உயிரிழப்பு!

ஏறாவூர், ஜன. 09

சவுதி அரேபியாவில் அபஹா எனும் இடத்தில் இடம் பெற்ற வாகன விபத்தில் மட்டக்களப்பு ஏறாவூரை சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

ஏறாவூர் மீராகேணியை சேர்ந்த முகமது ஹபீப் (வயது 25) எனும் இளைஞரே உயிரிழந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இளைஞர் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் சவூதி அரேபியாவுக்கு சாரதி தொழிலுக்காக சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 10 ரூபாயை முதலீடாக்கி எம். பி. ஆனவன் நான்!

## மாணவர்கள் மத்தியில் முஷாரப் எம். பி.

கல்முனை, ஜன. 09

ஒரு தாயின் 10 ரூபாய் பணம் உள்ளிட்ட மக்களின் பணம் மற்றும் பங்களிப்பின் மூலம் - மிகப்பெரும் பணக்கார வேட்பாளர்களை எதிர்கொண்டு பாராளுமன்ற உறுப்பினரான வன் நான் என்று மாணவர்கள் மத்தியில் கூறியுள்ளார் முஷாரப் எம். பி.

தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கல்முனையில் நடைபெற்றது. இதில் விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், புள்ளிவிபரவியல் தகவல் ஒன்றின்படி பல்கலைக் கழகத்துக்கு தெரிவாகின்றவர்கள் 4 சதவீதம் என்றால் சிறைச்சாலைக்கு செல்பவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் அதிகம் இருக்கின்றார்கள். இப்போது பெரும் ஆபத்து எம் சமூகத்தில் நிலவி வருகின்றது.

அதுமாத்திரமன்றி ஓர் ஊடகவியலாளராக இருந்து அதிகளவான எதிரிகளை சம்பாதித்துள்ளேன். ஆனால், இன்று ஒரு பாராளுமன்ற உறுப்பினராக ஒரு தாயின் 10 ரூபாய் பணத்தை முதலீடாக வைத்து வந்துள்ளேன். பணம் கொடுத்து வாக்குகளை பெறாமல் மக்கள் பணம் கொடுத்து என்னை அதாவது ஊடகவியலாளனை பாராளுமன்ற உறுப்பினராக உருவாக்கியுள்ளனர். எனவே, இளைஞர்களினால் சாதிக்க முடியும் என்ற நிலைமை தோன்றியுள்ளது - என்றார்.

# சமஷ்டியை தமிழர் பெறுவதற்கு இந்திய அனுசரணை வேண்டும்!

## ஜனநாயகப் போராளிகள் கட்சி

அக்கரைப்பற்று, ஜன. 09

அரசுடனான தமிழ்த் தலைமைகளின் பேச்சுக்கு இந்தியா மத்தியஸ்தம் வகிக்க வேண்டும். அத்தோடு இலங்கையிலே தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வாக சமஷ்டியை பெற்றுத்தர இந்தியா அனுசரணையாளராக இருக்க வேண்டும். - இவ்வாறு ஜனநாயக போராளிகள் கட்சியின் பொதுச்செயலாளர் கதிர் பாண்டிருப்பில் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கை இணைக்க வேண்டும், சமஷ்டி தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று நேற்றுமுன்தினம் அம்பாறை - பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்று பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்கு இரண்டு நாள் பயணமாக வரவுள்ளார். அவரின் வருகை தமக்கு நல்ல தீர்வை பெற்றுத் தரும் என்று எமது தமிழ் மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார்கள்.

பிரிக்கப்படாத வடக்கு - கிழக்கு மாகாணம் என்பது தமிழர்களின் பூர்வீகமான வாழ்விடம். இதைப் பெறுவதற்காக ஆயுத ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் போராடி வந்தோம். விலைமதிக்க முடியாத பல உயிர்களை இழந்தோம். பல கோடி சொத்துக்களை இழந்தோம்.

இன்று வட, கிழக்கு பிரிக்கப்பட்டு சிங்கள ஆக்கிரமிப்பாளர்களால் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை என்று பல கூறுகளாக பிரிந்து இருக்கின்றோம். அடக்கப்பட்ட - ஒடுக்கப்பட்ட சமூகமாக வாழ்கிறோம். எனவே இங்கு மகளிர் அணி முக்கியமான கோரிக்கையை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபடுகிறது .

தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்றுபட வேண்டும். கட்டாயம் இந்த ஒற்றுமைக்காக இந்த மகளிர் சமூகம் எடுத்துக் கொள்கிற முயற்சியை பாராட்டுகின்றேன். தமிழ் தலைமைகள் ஒன்றுபட்டு அரசிடம் பேச வேண்டும்.

எமக்கான நிரந்தர தீர்வு என்ன என்பதை தமிழ் மக்கள் அறுதியாகக் கூறியிருக்கின்றார்கள். அதுதான் சமஷ்டி. அயல் நாடான இந்தியா இந்த விசயத்திலே இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் .

இந்திய வெளிவிவகார அமைச்சர் இங்கு வருகின்றபோது நல்லதொரு கருத்தைச் சொல்வார் என்று இலங்கை தமிழ் மக்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றார்கள். இந்திய அரசு தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வை பெற்று தரும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

அதற்கு முன்னோடியாக இலங்கை அரசியல் யாப்பில் 1988இல் ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்தி வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணத்தில் தமிழருக்கான அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும்.

அதனை ஓர் அடித்தளமாக வைத்துக் கொண்டு இந்திய அரசின் அனுசரணையோடு சமஷ்டியை பெறுவதற்கு நாங்கள் பயணிக்க வேண்டும் - என்றார். (ஐ)

# ரூ. 137,175 கோடி ஆயுத உதவிகள் அமெரிக்கா உக்ரைனுக்கு அளிக்கும்!

வாஷிங்டன், ஜன. 09

ரஷ்யாவுடனான போரை எதிர்கொள்வதற்காக உக்ரைனுக்கு அதிநவீன ஆயுதங்களை வழங்கவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

உக்ரைன்- ரஷ்யா இடையேயான போரில் அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்டவை உக்ரைனுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வருகின்றன. இந்த நாடுகள் உக்ரைனுக்கு ஆயுத உதவிகளையும் தொடர்ந்து வழங்கி வருகின்றன. உக்ரைனுக்கு அமெரிக்கா ஏற்கெனவே ஆயுதங்களையும் நிதியுதவியையும் அதிக அளவில் வழங்கியுள்ளது.

இந்நிலையில், உக்ரைனுக்கு கூடுதலாக 375 கோடி அமெரிக்க டொலர் (ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 175 கோடி) மதிப்பிலான ஆயுத உதவியை வழங்கவுள்ளதாக அமெரிக்க அதிபர் பைடன் கடந்த வியாழக் கிழமை அறிவித்தார். இதை வெளி விவகார அமைச்சர் அன்ரனி பிளிங்கன் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார். இதில், 225 மில்லியன் டொலர் உக்ரைனின் இராணுவத்தை நீண்ட கால அடிப்படையில் நவீனப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கியுள்ள மொத்த நிதியுதவி 2400 கோடி டொலராக அதிகரித்துள்ளது.



கூடுதல் ராணுவ உதவியில் எம்2-ஏ2 பிராட்லி வகையைச் சேர்ந்த 50 கவச வாகனங்களை முதன்முறையாக உக்ரைன் இராணுவத்துக்கு அமெரிக்கா வழங்கவுள்ளது. அந்தக் கவச வாகனங்கள் எதிரிகளின் நவீன திறன் மிக்க இராணுவத் தளவாடங்களையும் அழிக்கும் திறன் கொண்டதாக அறியப்படுகிறது.

அத்துடன் பீரங்கிகளைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகள், வெடிபொருள்கள் உள்ளிட்ட பல்வேறு நவீன தளபாடங்களையும் உக்ரைன் இராணுவத்துக்கு வழங்கவுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அமைப்பான பென்டகன் தெரிவித்துள்ளது.

புதிய இராணுவ உதவி தொடர்பாக உக்ரைன் பாதுகாப்பு அமைச்சார் ஒலேக்சி ரெஸ்னிகோவிடம் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லொய்ட் ஒஸ்ரின் விரிவாகப் பேசினார் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. (ஐ)



# தொடர் வாகன விபத்து சீனாவில் 17 பேர் பலி!

பீஜிங், ஜன. 09

சீனாவின் ஜியாங்சி மாகாணத்தில் உள்ள நான்சாங் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் குறைந்தது 17 பேர் உயிரிழந்தனர். அத்துடன், 22 பேர் காயமடைந்துள்ளனர் என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், விபத்து குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

உள்ளூர் நேரப்படி அதிகாலை 1 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இறுதி ஊர்வலமொன்றின் மீது கனரக வாகனமொன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

பனிமூட்டம் நிலவுவதால் வீதி தெளிவற்று காணப்பட்டதன் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் நான்சாங் போக்குவரத்து காவல்துறையினர், அந்த பகுதியில் பனிமூட்டம் நிலவுவதால் ஓட்டுநர்களுக்கு பயண ஆலோசனைகளை வழங்கியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (ஐ)




# கோழி இறைச்சியை கழுவுவது ஆபத்து!

நியூயோர்க், ஜன. 09

கோழி இறைச்சியை பல தடவைகள் - நன்றாகக் கழுவிய பின்னரே அதிகமானோர் சமைக்கின்றனர். ஆனால், இந்த செயல் அபாயகரமானது என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

சர்வதேச உணவுப் பாதுகாப்பு மற்றும் வழிமுறைப்படுத்தும் நிபுணர்கள் அனைவருமே இந்த ஒரே கூற்றையே கூறுகின்றனர்.

கோழி இறைச்சியை சமைப்பதற்கு முன்பு, சமையலறையில் வைத்து கழுவக்கூடாது. இறைச்சியில் இருக்கும் பற்றீரியாக்கள், அதனை கழுவும்போது அதிலிருந்து தெறிக்கும் நீர் மூலம் ஒட்டுமொத்த சமையலறைக்கும் பரவும் அபாயம் உள்ளது.

கோழி இறைச்சியை அப்படியே சமைத்து சாப்பிடுவதே போதுமானதும் பாதுகாப்பானதும் என்கிறார்கள் நிபுணர்கள். ஆனால், கோழி இறைச்சியை சமையலறையில் வைத்து கழுவுவதையே அதிகமானோர் செய்கின்றனர்.பெரும்பாலான நாடுகளில் இந்தப் பழக்கமே பின்பற்றப்படுகின்றது. ஆனால் அபாயகரமான இந்த பழக்கத்தை மக்கள் கைகொள்வது ஏன்?

மஞ்சள், உப்பு உள்ளிட்டவற்றை பயன்படுத்தி கோழி இறைச்சியை கழுவும்போது கிருமிகளை அழிப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். ஆனால், கோழி இறைச்சியில் இருக்கும் பற்றீரியாக்கள், நுண்கிருமிகள் வெப்பத்தால் மட்டுமே அழிக்கப்படும் - என்கிறார்கள் நிபுணர்கள்.

கோழி இறைச்சியை கழுவியே சமைக்க வேண்டும் என்று எண்ணுபவர்கள் எந்த பாத்திரத்தையும் பயன்படுத்தாமல் ஓடும் நீரில் கழுவி, பின்னர் அந்த இடத்தை சுத்தம் செய்ய வேண்டும். அதன் பின்னர், கைகளை கிருமிநீக்கம் செய்த பின்னர் ஏனைய பாத்திரங்களை பயன்படுத்த வேண்டும் என்றும் நிபுணர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ஐ)

# ஹிஜாப்புக்கு எதிரான போராட்டம் இருவருக்கு தூக்குத் தண்டனை!

தெஹ்ரான், ஜன. 09

ஈரானில் அண்மையில் நடந்த ஹிஜாப் போராட்டத்தின்போது ஏற்பட்ட வன்முறையில் துணை இராணுவப் படை சிப்பாயை கொன்ற வழக்கில் 2 பேர் சனிக்கிழமை தூக்கிலிடப்பட்டனர் என்று அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், நாடு முழுவதும் பரவலாக நடைபெற்று வரும் போராட்டத்தை முடக்கும் நோக்கில் மக்களிடம் அச்ச உணர்வை ஏற்படுத்தும் முயற்சி இது எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஈரானில் கடந்த செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி மாஷா அமீனி என்ற 22 வயது இளம்பெண் ஹிஜாப் சரியாக அணியவில்லை என்று கலாசார கண்காணிப்பு காவலர்களால் காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு மயங்கி விழுந்த அவர், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சில நாள்களில் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் ஈரான் முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. பெண்கள் பலர் ஹிஜாப் அணிவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், காவல் துறையின் அடக்குமுறைக்கு எதிராகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே, கடந்த நவம்பர் 3-ஆம் திகதி கரஜ் நகரில் நடந்த போராட்டத்தின்போது பாதுகாப்புப் பணியில் இருந்த துணை இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். போராடும் மக்களிடையே வன்முறையைத் தூண்டும் வகையில் உரையாற்றி இந்தக் கொலைக்கு உடந்தையாக இருந்தனர் என்று முகமது மெஹ்தி கராமி, முகமது ஹொசைனி ஆகிய இருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

ஈரான் புரட்சிகர நீதிமன்றத்தில் நடைபெற்ற இரகசிய வழக்கு விசாரணையில் குற்றம் நிரூபிக்கப்பட்டு மரண தண்டனைஅறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, அந்நாட்டு வழக்கத்தின்படி இருவரையும் தூக்கிலிட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஹிஜாப் போராட்டம் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்காக இதுவரை 4 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர். ஆனால், இந்த எண்ணிக்கை 16இற்க்கு மேல் இருக்கும் என போராட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

இதே போல், ஹிஜாப் போராட்டத்தில் கலந்து கொண்ட 517 போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டனர். 19 ஆயிரத்து 200இற்கும் மேற்பட்ட பொது மக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

# இஸ்ரேல் அரசுக்கு எதிராக போராட்டங்கள் அதிகரிப்பு

டெல்அவிவ், ஜன. 09

இஸ்ரேலில் கடந்த மாதம் நடந்த பொதுத்தேர்தலில் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான வலதுசாரி கூட்டணி 64 இடங்களில் வென்று ஆட்சியை பிடித்தது. நெதன்யாகுவின் லிகுட் கட்சி 32 இடங்களை பிடித்து தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. யாயிர் லாபிட் தலைமையிலான கூட்டணி 51 இடங்களை பிடித்தது.

அந்நாட்டின் நான்கு ஆண்டுகளில் நடந்த 5ஆவது பொதுத்தேர்தல் இதுவாகும். கடந்த 4 முறை நடந்த தேர்தல்களில் எந்த கூட்டணிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இந்த தேர்தலில் நெதன்யாகுவின் கூட்டணிக்கு பெரும்பான்மை கிடைத்தது.

120 இடங்களை கொண்ட இஸ்ரேல் பாராளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பில் நெதன்யாகு வெற்றி பெற்று கடந்த 29ஆம் திகதி பிரதமராக பதவியேற்றிருந்தார்.

இந்த நிலையில் பெஞ்சமின் நெதன்யாகுவின் புதிய அரசுக்கு எதிராக போராட்டம் வெடித்தது. டெல்அவிவ் நகரில் திரண்ட ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் நெதன்யாகு அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்கள். ஜனநாயகம், சுதந்திரம் ஆபத்தில் உள்ளன. பாசிசம் மற்றும் நிறவெறிக்கு எதிராக ஒன்றிணைவோம் உள்ளிட்ட பதாகைகளை போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். டெல் அவிவ் நகரில் மத்திய மற்றும் தெற்கு பகுதி உள்ளிட்ட பல இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

இஸ்ரேலில் சில ஆண்டுகளாக நிலையான அரசு அமையாமல் இருந்து வந்த நிலையில் தற்போது நெதன்யாகு தலைமையில் அரசு அமைந்துள்ளது. இந்த நிலையில் அந்த அரசுக்கு எதிராக போராட்டங்கள் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட்:

# மூன்றாவது போட்டி சமநிலை; தொடர் அவுஸ்திரேலியா வசம்!



சிட்னி, ஜன. 09

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டி நேற்று சமநிலையில் முடிவடைந்தது. இதனால், அந்த அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2 - 0 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

தென்னாபிரிக்க அணி அவுஸ்திரேலியா சென்றுள்ளது. இரு அணிகளும் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடின. முதல் இரு போட்டிகளையும் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி 475 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்த நிலையில் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டது. இதில், கவாஜா 195 ஓட்டங்களையும், ஸ்மித் 104 ஓட்டங்களையும் குவித்திருந்தனர்.

மூன்றாம் நாள் ஆட்டம் மழையால் முற்றாகப் பாதித்த நிலையில், நான்காம் நாளில் துடுப்பெடுத்தாடியது தென்னாபிரிக்க அணி.

தொடக்க வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் ஏமாற்றினர். எனினும், நான்காவது வீரராகக் களமிறங்கிய பவுமா, ஷொண்டோ ஆகியோர் ஓரளவுக்கு தாக்குப்பிடித்தனர். பவுமா 35, ஷொன்டோ 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து மற்றவர்கள் சோபிக்கவில்லை. எனினும், எட்டாவது வீரராக இறங்கிய சிமொன் ஆர்மர், கேஷவ் மஹராஜ் போராட்டத்தை வெளிப்படுத்தினர்.

இவர்களின் போராட்டத்தால் தென்னாபிரிக்காவின் ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தது. ஆர்மர் 47 ஓட்டங்களுடனும் மஹராஜ் 53 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து தென்னாபிரிக்காவின் போராட்டமும் முடிவுக்கு வந்தது. அந்த அணி முதல் இனிங்ஸில் 255 ஓட்டங்களையே எடுத்தது.

இதனால், தொடர்ந்தும் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை தென்னாபிரிக்காவிடமே வழங்கியது அவுஸ்திரேலியா.

சரேல் எர்வீ, டீன் எல்கர் தொடக்கம் கொடுத்தனர். டீன் எல்கர் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஹென்றிச் கிளாசன் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த பவுமா, எர்வீயுடன் இணைந்து நிலைத்து ஆடினார். நேற்றையநாள் ஆட்டம் முடிவடைந்தபோது தென்னாபிரிக்கா 2 விக்கெட்களை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதனால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

எர்வீ 42 ஓட்டங்களுடனும் பவுமா 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

போட்டியின் நாயகனாக உஸ்மான் கவாஜாவும், தொடரின் நாயகனாக டேவிட் வோர்ணரும் தெரிவாகினர். (ஐ)




# இலங்கையை தோற்கடித்து தொடரை வென்றது இந்தியா!

ராஜ்கொட், ஜன. 09

இலங்கை அணியை 91 ஓட்டங்கள் என்ற மிகப்பெரிய இடைவெளியில் வீழ்த்தி இருபது - 20 தொடரை 2 - 1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது இந்திய அணி.

இந்தியா சென்றுள்ள இலங்கை அணி இருபது - 20, ஒருநாள் தொடர்களில் விளையாடுகிறது. இருபது - 20 தொடரில், 1 - 1 என்ற கணக்கில் இரு அணிகளும் சமநிலையில் இருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு இரு அணிகளும் 3ஆவது இருபது - 20 போட்டியில் மோதின.

ராஜ்கொட்டில் நடந்த இந்தப் போட்டியில் சூரியகுமார் யாதவ் அதிரடியாக ஆடி சதம் அடித்திருந்ததை இந்திய அணிக்கு இரட்டிப்பு பலத்தை சேர்த்தது.

இலங்கைக்கு எதிரான தொடரை கைப்பற்றியதன் மூலம் இருபது - 20 இருதரப்பு தொடர்களில் தொடர்ச்சியாக 7 வெற்றிகளையும் 11ஆவது சர்வதேச தொடர் வெற்றியையும் இந்தியா பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்களை மட்டும் இழந்து 228 ஓட்டங்களைக் குவித்தது.

போட்டியின் முதல் ஓவரிலேயே டில்ஷான் மதுஷங்கவின் பந்துவீச்சில் ஓர் ஓட்டத்துடன் இஷான் கிஷான் ஆட்டமிழந்தார். அடுத்து ஜோடி சேர்ந்த ஷூப்மன் கில், ராகுல் திரிபாதி ஆகிய இருவரும் 2ஆவது விக்கெட்டில் 31 பந்துகளில் 48 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு உற்சாகம் ஊட்டினர்.

ராகுல் திரிபாதி 16 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 35 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து ஷூப்மன் கில், சூரியகுமார் யாதவ் ஆகிய இருவரும் 3ஆவது விக்கெட்டில் 53 பந்துகளில் 111 ஓட்டங்களை பகிர்ந்து இந்திய அணியை பலப்படுத்தினர். ஷூப்மன் கில் 3 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகள் அடங்கலாக 46 ஓட்டங்களைக் குவித்தார்.

ஷூப்மான் கில், அணித் தலைவர் பாண்ட்யா (4), தீபக் ஹூடா (4) ஆகிய மூவரும் சீரான இடைவெளியில் ஆடுகளம் விட்டகன்றனர். எனினும், சூரயகுமார் யாதவ், அக்சர் பட்டேல் இருவரும் மீண்டும் அதிரடியில் இறங்கி பிரிக்கப்படாத 6 ஆவது விக்கெட்டுக்காக 20 பந்துகளில் 29 ஓட்டங்களைப் பகிர்ந்து மொத்த எண்ணிக்கையை 228 ஓட்டங்களாக உயர்த்தினர்.

சூரியகுமார் யாதவ் 51 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 9 சிக்ஸர்கள், 7 பௌண்ட்ரிகள் உட்பட 112 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

அக்சர் பட்டேல் 9 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள் அடங்கலாக 21 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தார்.

இலங்கையின் பந்துவீச்சில் டில்ஷான் மதுஷங்க 55 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார். 229 ஓட்டங்கள் என்ற கடினமான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை 16.4 சகல விக்கெட்களையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வி அடைந்தது.

இந்திய பந்துவீச்சாளர்களை முறையாக எதிர்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்ட இலங்கை துடுப்பாட்ட வீரர்கள் பெரும்பாலும் தவறான அடி தெரிவுகளால் விக்கெட்டை பறிகொடுத்தனர்.

பதும் நிஸங்க (15), குசல் மெண்டிஸ் (23) ஆகிய இருவரும் 29 பந்துகளில் 44 ஓட்டங்களை பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்த போதிலும் அதன் பின்னர் விக்கெட்கள் மளமளவென சரிந்தன.

ஆரம்ப வீரர்கள் உட்பட தனஞ்சய டி சில்வா (22), சரித் அசலங்க (19), தசுன் ஷானக (23) ஆகியோரைவிட வேறு எருவரும் இரட்டை இலக்க எண்ணிக்கையை எட்டவில்லை.

முதல் இரண்டு போட்டிகளில் இலங்கையின் துடுப்பாட்டம் சிறப்பாக அமைந்த போதிலும் இந்தப் போட்டியில் ஓட்டுமொத்தத்தில் தடுமாற்றம் நிறைந்ததாகவே அமைந்தது. பந்துவீச்சிலும் சரி துடுப்பாட்டத்திலும் சரி இலங்கையால் ஈடுகொடுக்க முடியவில்லை.

இந்தியாவின் பந்துவீச்சில் அர்ஷ்தீப் சிங் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ஹார்திக் பாண்ட்யா, யுஸ்வேந்த்ரா சஹால் ஆகிய இருவரும் தலா 30 ஓட்டங்களுக்கு தலா 2 விக்கெட்களையும் உம்ரன் மாலிக் 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக சூரியகுமார் யாதவும், தொடர் நாயகனாக அக்சர் பட்டேலும் தெரிவாகினர். (ஐ)

# இந்திய அணியை வழிநடத்தும் தகுதி ரோஹித்துக்கு உள்ளதா?

## கபில்தேவ் கேள்வி

இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா இந்திய அணியை வழிநடத்தும் அளவுக்கு உடற்தகுதியுடன் இருக்கிறாரா? என்பதில் தனக்கு சந்தேகம் உள்ளதாக இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளுக்கான இந்திய அணியின் தலைவராக ரோகித் சர்மா நியமிக்கப்பட்டார். கடந்த ஆண்டில், இந்திய அணி 68 போட்டிகளில் விளையாடியது. இதில் 5 டெஸ்ட் போட்டிகளும், 21 ஒருநாள் போட்டிகளும், 42 இருபது - 20 போட்டிகளும் அடங்கும். ஆனால், இதில் 2 டெஸ்ட், 8 ஒருநாள் போட்டி, 29 இருபது - 20 போட்டிகள் உள்பட 39 போட்டிகளில் மட்டுமே ரோஹித் சர்மா விளையாடியுள்ளார்.

இதில் காயம் காரணமாக ரோஹித் சர்மா சில போட்டிகளில் விளையாடவில்லை. பல்வேறு காரணங்களால் நல்ல போட்டிகளில்கூட அவர் விளையாடவில்லை. இதனால், ரோஹித் சர்மாவின் உடற்தகுதி குறித்த விமர்சனங்கள் வரத் தொடங்கியுள்ளன.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள கபில்தேவ், ரோஹித் சர்மா கிரிக்கெட் திறன் குறித்து எந்த சந்தேகமும் ஏற்படவில்லை. கடந்த 10 ஆண்டுகளில் விராட் கோலியுடன் இணைந்து ரோஹித் சர்மா இந்திய அணியின் துடுப்பாட்டத்துக்கு பக்க பலமாக இருந்துள்ளார். ஆனால், தற்போது அவரின் உடல்தகுதி குறித்து தான் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அவர் முழு உடல் தகுதியுடன் இருக்கிறாரா? ஓர் அணி தலைவனாக இந்த உடல்தகுதி போதுமா?. ஏனெனில் தலைவர் என்பவர் அனைத்து வீரர்களுக்கும் முன்மாதிரியாக இருப்பவர். மற்ற வீரர்கள் தங்கள் அணியின் தலைவரை நினைத்து பெருமை கொள்ளும்படி உடற்தகுதியுடன் இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த வீரர்களின் உடற்தகுதி சிறப்பாக இருக்கும்" என்று தெரிவித்துள்ளார். (ஐ)



# ஓய்வு பெறுகிறார் சானியா மிர்சா!

ஹைதராபாத், ஜன. 09

இந்திய ரென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்சா வரும் பெப்ரவரி மாதம் ஓய்வு பெறவுள்ளார் என்று அறிவித்துள்ளார். 36 வயதான சானியா மிர்சா, இரட்டையர் பிரிவில் 6 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்றுள்ளார்.

ஹைதராபாத்தைச் சேர்ந்த இவர், தனது 20 ஆண்டு கால தொழில்முறை ரென்னிஸ் வாழ்க்கைக்கு அடுத்த மாதம் - பெப்ரவரி முற்றுப்புள்ளி வைக்கிறார். அடுத்த மாதம் துபாயில் நடைபெறவுள்ள டபிள்யூ. ரி. ஏ. (பெண்கள் டென்னிஸ் சங்கம்) 1000 நிகழ்வு போட்டியே தனது இறுதிப் போட்டி என்று கூறியுள்ளார்.

கடந்த பருவ காலத்திலேயே ஓய்வு முடிவை அவர் அறிவித்தார். ஆனால், காயம் காரணமாக அமெரிக்க ஓப்பனில் அவர் விளையாடவில்லை.

எதிர்வரும் 16ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் ஆரம்பமாகும் ஆஸி. ஓப்பனில் பங்கேற்கும் அவர் கஜகஸ்தானின் அன்னா டானிலினாவுடன் இணைந்து விளையாடவுள்ளார்.

சானியா இதுவரை இரண்டு அவுஸ்திரேலிய ஓப்பன் சம்பியன்ஷிப்பை வென்றுள்ளார். 2016 இல் மார்டினா ஹிங்கிஸூடன் பெண்கள் இரட்டையர் மற்றும் மற்றொன்று 2009 இல் மகேஷ் பூபதியுடன் கலப்பு இரட்டையர் போட்டிகளில் அவர் வென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 7 பெண்கள் ஓமானிலிருந்து நேற்று நாடு திரும்பினார்கள்!

கொழும்பு, ஜன. 09

**ஓமானில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு சொந்தமான 'சுரக்ஷா' இல்லத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 7 பெண்கள் நேற்று அதிகாலை கட்டுநாயக்கவை வந்தடைந்தனர்.**

இவர்கள் நேற்று அதிகாலை 05.21 மணியளவில் மஸ்கட்டில் இருந்து சிறீ லங்கன் எயார் லைன்ஸ் விமானத்தில் கட்டு நாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

ஓமானில் உள்ள 'சுரக்ஷா' இல்லத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 118 வீட்டுப் பணியாளர்களில் 11 பேரை இலங்கைக்கு அனுப்புவதற்காக மஸ்கட் விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறானவர்களில் நான்கு பேரின் ஆவணங்களில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக அவர்களுக்கு நாடு திரும்ப வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இந்த நான்கு பணிப்பெண்களும் வென்னப்புவ, திருகோணமலை, கிண்ணியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் ஆவர். (ஐ)

## போலி தலதா மாளிகையை அகற்றும் பணி ஆரம்பமானது!

கொழும்பு, ஜன. 09

குருநாகல் - பொத்துஹெர வில் நிர்மாணிக்கப்பட்டதாகக் கூறப்படும் போலி தலதா மாளிகையின் பத்திரிப்பு பகுதியை அகற்றும் நடவடிக்கை நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதுடன் இதனை அகற்றுமாறு அஸ்கிரிய மல்வத்து மகா நாயக்க தேரர்கள் உட்பட பல தரப்பினரும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் இந்த இடத்துக்குச் சென்ற முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, போலி தலதா மாளிகையின் பத்திரிப்பு பகுதியை அகற்றுமாறு அதன் ஸ்தாபகர் ஜனக சேனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

இதேவேளை, நிர்மாணிக்கப்பட்டதாக கூறப்படும் போலி தலதா மாளிகை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## குழுக்களிடையே மோதல் குடும்பஸ்தர் ஒருவர் பலி!

கொழும்பு, ஜன. 09

இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டார். அத்துடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

கம்பஹா - பேலியகொடை-பெத்தியகொட பிரதேசத்தில் சனிக்கிழமை இரவு இரு குழுக்களுக்கிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இது மோதலாக மாறியது.

இதில், களனி பெத்திய கொட பகுதியைச் சேர்ந்த 42 வயதான ஒருவரே தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த இருவர் கொழும்பு தேசிய மருத்துவமனையிலும், மூவர் ராகமை மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பேலிய கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கடன் அட்டை தகவல்கள் மூலம் ரூ. 55 இலட்சம் சுருட்டியவர் கைது!

கொழும்பு, ஜன. 09

திருடப்பட்ட கடன் அட்டை தகவல்களைப் பயன்படுத்தி 55 இலட்சம் ரூபாய்க்கு மேல் பொருட்களை வாங்கிய குற்றச்சாட்டில் 18 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் தம்மலசூரிய பிரதேசத்தை சேர்ந்த இளைஞர் 5 இலட்சம் வெளிநாட்டு கடன் அட்டை பாவனையாளர்களின் தகவல்களை சேகரித்து, 90 கடன் அட்டைகள் மூலம் 55 இலட்சம் ரூபாய்க்கு பொருட்களை வாங்கியுள்ளார்.

கணனி, கமெரா, உணவு, மதுபானம் உள்ளிட்ட பொருட்களை அந்த பணத்தின் மூலம் அவர் வாங்கியுள்ளார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## கோட்டாபய வீட்டுக்கு பாதுகாப்பளித்த பொலிஸாரை சுட முயன்றவர் கைது!

கொழும்பு, ஜன. 09

மிரிஹானையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட்மீது துப்பாக்கிச் சூடு நடத்த முயன்ற குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மிரிஹானை தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட கான்ஸ்டபிளிடம் இருந்து கடமை நிமித்தம் வழங்கப்பட்ட துப்பாக்கியும் பொலிஸ் காவலில் எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரான கான்ஸ்டபிளுக்கு துப்பாக்கியுடன் 30 தோட்டாக்கள் வழங்கப்பட்டன. எனினும், அதில் ஒன்றை காணவில்லை என தெரிவிக்கும் பொலிஸார், அந்த தோட்டாவுக்கு என்ன நடந்தது என்பதை அறிய விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 2022ஆம் ஆண்டில் மட்டும் 395 யானைகள் கொலை!

கொழும்பு, ஜன. 09

மற்றைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் கடந்த 2022ஆம் ஆண்டு இலங்கையில் யானைகளுக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்திய ஆண்டாகும் என்று சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வு மையம் கூறுகிறது.

2022 ஜனவரி முதல் டிசெம்பர் 5ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கையில் உயிரிழந்த யானைகளின் எண்ணிக்கை 395ஆக உள்ளது.

இது ஒரு வருடத்தில் பதிவு செய்யப்பட்ட யானைகளின் அதிகபட்ச உயிரிழப்பு எண்ணிக்கையாகும். யானையின்-மனித மோதல் காரணமாக 127 பேர் உயிரிழந்தனர். அத்துடன் 2019ஆம் ஆண்டில் 207 யானைகள், 2020இல் 318 யானைகள் மற்றும் 2021இல் 375 யானைகள் இறந்துள்ளன.

இதேவேளை சுற்றாடல் மற்றும் இயற்கை கற்கைகளுக்கான நிலைய அறிக்கையின்படி, இலங்கையில் தினமும் ஒரு யானை இறப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பிரபா, அரவிந்த குமார் கூட்டணி!

நுவரெலியா, ஜன. 09

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் ஆகியன கூட்டணியாக இணைந்து 'தபால்பெட்டி' சின்னத்தில் போட்டியிட தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் முன்னணியின் பிரதி பொது செயலாளர் எஸ். அஜித்குமார் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான வேட்புமனு கோரல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே முன்னணியின் பிரதி பொது செயலாளர் இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

மேலும், ஐக்கிய மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் தலைவரும், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், கல்வி இராஜாங்க அமைச்சருமான அ. அரவிந்தகுமார் தலைமையில் ஐக்கிய மக்கள் முன்னணி சார்பில் மத்திய, ஊவா, சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் போட்டியிடவுள்ளன. ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தலைமையில் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் சார்பில் மேல் மாகாணம் மற்றும் வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளில் போட்டியிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

"மலையகத்தில் பல கட்சிகள் இருக்கின்ற போதிலும் மக்களுடைய தேவைகளை அறிந்து செயல்படாமல் இருந்ததன் காரணமே இன்று மக்கள் பல்வேறு உரிமை ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், தங்களது தேவைகளை கூட நிவர்த்தி செய்து கொள்ள முடியாத நிலைமையிலேயே வாழ்ந்து வருகின்றனர்."

"புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கட்சி என்ற ரீதியில் நாங்கள் மக்களுடைய அபிலாசைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நோக்கிலேயே தான் இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் களம் இறங்க மக்களுடைய ஆணையை பெற்று இம்முறை தேர்தலுக்கு தயாராகவுள்ளோம். எமது கட்சியின் ஊடாக உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிட விரும்புவர்கள் தம்முடன் இணையுங்கள்", என்றும் ஐக்கிய மக்கள் முன்னணியின் பிரதி பொது செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

## நுரைச்சோலை மின்பிறப்பாக்கி மீண்டும் செயல்பட ஆரம்பித்தது

கொழும்பு, ஜன. 09

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் செயலிழந்திருந்த மின்பிறப்பாக்கி நேற்று முதல் இயங்க ஆரம்பித்தது.

பராமரிப்பு நோக்கத்துக்காக குறித்த மின்பிறப்பாக்கி செயலிழக்க செய்யப்பட்டிருந்தது. இதனால் தேசிய மின் கட்டமைப்புக்கு 270 மெகாவாட்ஸ் மின்சாரம் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, நிலக்கரி ஏற்றிக்கொண்டு மற்றுமொரு கப்பல் நேற்று முன்தினம் புத்தளத்தை வந்தடைந்ததுடன், இந்த வருடத்தில் இலங்கையை வந்தடைந்த இரண்டாவது நிலக்கரி கப்பல் இதுவாகும். (ஐ)

## சட்டத்தை பின்பற்றாமல் வேட்பு மனு கோரினால் கட்டுப்பணத்தை தேர்தல் குழு செலுத்த நேரிடும்!

### இப்படி எச்சரிக்கிறது சட்ட நிபுணர் குழு

கொழும்பு, ஜன. 09

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை கோருவதில் தேர்தல்கள் ஆணைக்குழு முறையான சட்ட நடைமுறைகளை பின்பற்றாவிட்டால், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களால் செலுத்தப்பட்டுள்ள கட்டுப்பணத்தை ஆணைக்குழு உறுப்பினர்கள் தமது தனிப்பட்ட கணக்கிலிருந்து செலுத்த நேரிடும் என சட்ட நிபுணர்கள் குழு ஒன்று அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுன் அண்மையில் நடைபெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதியிடம் இவ்விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான வேட்புமனு கோரலுக்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழுவினால் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் அழைத்து கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட வேண்டும்.

தெரிவத்தாட்சி அலுவலர்கள், உதவி தேர்தல் ஆணையாளர்கள், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினரை அழைத்து கலந்துரையாடல்களை முன்னெடுக்காமல், தேர்தல் தொடர்பான எந்தவொரு அறிவித்தலையும் வெளியிட முடியாது என்றும் அவர்கள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும், தேர்தல் ஆணைக்குழு கடந்த டிசம்பர் 21 ஆம் திகதி இறுதியாக இந்த அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடியுள்ளது. இதன் பின்னர் இதுவரையில் அவர்கள் மேற்குறிப்பிட்ட குழுவினரை சந்திக்கவில்லை என்பதும் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதிக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது தெரியவந்துள்ளது.

இது சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலை நடத்துவதில் பாரதூரமான தாக்கத்தை செலுத்தும் என்றும் குறித்த சட்ட நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழு இவ்வாறு முறையான சட்ட முறைமைகளை பின்பற்றாவிட்டால், தேர்தலை சட்ட ரீதியாக நடத்துவதில் சிக்கல்கள் ஏற்படும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தற்போது வேட்பு மனு தாக்கல் கோரப்பட்டுள்ளது. அதற்கமைய அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களால் கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு செலுத்தப்படும் கட்டுப்பணம் தேர்தல் செயலாளர் அலுவலகத்தால் திறைசேரிக்கு அனுப்பப்படும்.

ஆனால், தேர்தல் ஆணைக்குழு வழமைக்கு மாறாக வேட்பு மனு கோரியுள்ளதாக நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள்செலுத்திய கட்டுப்பணத்தை தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகள் தமது தனிப்பட்ட கணக்கிலிருந்து செலுத்த வேண்டும் என்று சட்ட நிபுணர்கள் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கூட்டமைப்பில்...

நேற்றைய தினம் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கு. சுரேந்திரன் யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அந்த சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் இருக்கின்ற ஒரு கட்சியினர் சில தீர்மானங்களை எடுத்துள்ளனர். அவ்வாறான தீர்மானங்களிலும் மாறுபட்ட நிலைப்பாடுகள் உள்ளன. தமிழ் தேசிய கூட்டமைப்பு என்பது பல கட்சிகளை உள்வாங்கி பயணித்து வந்த ஓர் அமைப்பு.

காலத்தின் கோலத்தினால் பலர் அதிலிருந்து வெளியேறிய சூழல் காணப்படுகின்றது. இன்னும் பலரையும் நாங்கள் இணைக்க வேண்டிய தேவையும் இருக்கின்றது. ஆகவே இந்த முயற்சியைத் தொடர்ந்து மற்ற அங்கத்துவ கட்சிகளும் - இப்போது ஒருமித்த நிலைப்பாட்டிலே செயலாற்றி கொண்டிருப்பவர்களை - நாங்கள் சரியான முறையிலே ஒருங்கமைத்து ஒரு கட்டமைப்பாக பலப்படுத்த வேண்டும் என்பதே எங்களுடைய நோக்கம்.

தனிப்பட்ட ரீதியிலே கட்சிகளின் கூட்டங்களிலே எடுக்கப்படுகின்ற முடிவுகள் ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அல்லது தமிழர் தரப்பை ஒற்றுமைப்படுத்த வேண்டும் என்ற முயற்சிக்கு பங்கம் ஏற்படுத்தாது என்பது எங்களுடைய நிலைப்பாடு.

## மலையக...

அக்கரைப்பத்தனையில் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தலைமையில் தொழிலாளர் தேசிய முன்னணி செயல்பாட்டாளர்களின் விசேட சந்திப்பு நடைபெற்றது. இதில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “தமிழக அரசின் அழைப்பையேற்று, மலையக மக்கள் சார்பில், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவராக நாளை (இன்று) சென்னை செல்கின்றேன். தமிழக வம்சாவளி தமிழர்களின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகவே செல்கின்றேன். இதன்போது எமது மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்களை, துயரங்களை, கஷ்டங்களையெல்லாம் தமிழக முதல்வரிடம் எடுத்துக்கூறவுள்ளேன்.

வடக்கு, கிழக்கில் வாழ்பவர்கள்தான் தமிழர்கள், அவர்களுக்கு மட்டுமே பிரச்னை உள்ளது என்றே இதுவரை காலமும் நினைத்துக் கொண்டிருந்தனர். வடக்கு, கிழக்கு பற்றி பேசுவது தப்பில்லை. ஆனால் மலையகத்தை மறந்துவிட்டனர். இந்நிலைமை தற்போது மாறியுள்ளது. மலையக தமிழர்களும் சுயமரியாதையுள்ள ஓர் இனம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நானும், திகாம்பரமும் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினோம். அரசில் இணையுமாறு அழைப்பு விடுத்தார். மறுத்துவிட்டோம். பதவிகள் எல்லாம் எங்களை தேடிவரும் எனக் கூறினோம். நாட்டின் ஜனாதிபதி நீங்கள், எங்கள் மக்கள்மீது அக்கறை கொள்ள வேண்டும் எனவும் எடுத்துரைத்தோம்.

வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்துகின்றீர்கள். தேசிய இனப் பிரச்னையானது வடக்கு, கிழக்குக்கு மட்டும் உரித்தானது அல்ல. எங்களிடமும் பேசுங்கள் என்றோம். எமது மக்களுக்கும் அரசியல், சமூக மற்றும் கலாசார அபிலாஷைகள் உள்ளன. தேவைப்பாடுகள் உள்ளன. எனவே, எங்கள் பிரச்னை பற்றியும் கண் திறந்து பாருங்கள், காது கொடுத்து கேளுங்கள் எனவும் குறிப்பிட்டோம்.

மலையக கட்சிகளை அழைத்து ஜனாதிபதி பேச்சு நடத்தாதுவிட்டால், சர்வக் கட்சி கூட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி பங்கேற்காது. எங்களை மதித்தால்தான் நாமும் மதிப்போம். உள்ளூராட்சி மன்ற தேர்தல் வந்தால் போட்டியிடுவோம். நாம் தேர்தலுக்கு தயார்.” - என்றார். (ஐ)

இதேபோன்று தேர்தல்களிலே எப்படி முகம் கொடுப்பது என்பதை பற்றி ஒரு கட்சியின் கூட்டத்திலே பேசப்பட்டதாக, நாங்கள் ஊடகங்கள் வாயிலாக அறிகின்றோம். அதிலும் சில மாறுபட்ட கருத்துக்களையே நாங்கள் அறிகின்றோம். ஆகவே சரியான தீர்வு என்ன? என்பதை அங்கத்துவ கட்சிகளோடு கலந்துரையாடி முடிவுக்கு வருவதாக ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டம் நடைபெற்ற பின்னர்தான், தேர்தல்கள் எப்படி எதிர்கொள்ளப்படும் என்பதை எங்களுக்கு உறுதியாக சொல்ல முடியும்- என்றார்.

இதனிடையே செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய சின்னத்தில் போட்டியிடுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்பட்டால் பொது சின்னம் ஒன்று தெரிவு செய்யப்படும். பல உயிர்தியாகங்களின் பின்னர் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை குறுகிய நோக்கங்களுக்காக இல்லாமல் செய்வதற்கு ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் அவர் கூறினார். (ஐ)

## தேர்தலை...

வரும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் எந்த காலத்திலும் எந்தவொரு தேர்தலையும் பிற்போடுமாறு தெரிவித்ததில்லை என இலங்கையில் செயல்பட்டு வரும் 7 தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் கூட்டாக இவ்வாறு அறிக்கை வெளியிட்டுள்ளன.

அதில், உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக வேட்புமனு தாக்கல் செய்வதற்கான திகதி அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் மிக அண்மித்த தினம் ஒன்றில் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

என்றாலும் தேர்தலை எந்தவகைலாவது பிற்படுத்துவதற்காக பொறுப்புக் கூறக்கூடிய பிரிவினர் பல்வேறு நடவடிக்கைகளை கையாண்டு வருவதால், தேர்தல் உறுதியாக இடம்பெறுமா என்ற சந்தேகம் நிலவுகிறது.

அத்துடன், உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போடுவதற்காக இந்த நாட்டில் செயற்பட்டு வரும் தேர்தல் கண்காணிப்புகள் கோரிக்கை முன்வைத்திருப்பதென்ற கருத்தை உருவாக்குவதற்கு சிலர் முயற்சித்து வருவதை காணமுடிகின்றது.

இலங்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு ஏற்ப மற்றும் சரியான நேரத்தில் தேர்தல்களை நடத்துவதில் சிறந்த சாதனையை கொண்ட அரசாகும். எந்தவொரு ஜனநாயக நாடொன்றின் இருப்பு தீர்மானிக்கப்படுவது உரிய காலத்துக்கு நடத்தப்படும் தேவையான தேர்தல்கள் மூலமாகும்.

அதனால் இந்த நாட்டில் செயற்பட்டு வரும் எந்தவொரு தேர்தல் கண்காணிப்பு அமைப்பும் எந்த சந்தர்ப்பத்திலும் எந்த தேர்தலையும் பிற்போடவேண்டும் என தெரிவித்ததில்லை என்பதை மிகவும் பொறுப்புடன் தெரிவித்துக்கொள்றோம் - என்றுள்ளது.

(ஐ)

## 12,000...

வாரம் நடத்தப்படவுள்ளது. அத்துடன், இதற்கான வர்த்தமானி அறிவித்தல், விரைவில் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என். ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள பட்டதாரிகள் உட்பட அரச சேவையில் உள்ள 40 வயதுக்கு பட்டதாரிகள் இதற்காக விண்ணப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம் மற்றும் அழகியல் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதற்கமைய, போட்டி பரீட்சையை விரைவாக நடத்தி ஏப்ரல் மாதத்துக்கு முன்னதாக புதிய ஆசிரியர்களை சேவையில் இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## தாதியர்கள்...

எதிராக தொழில்சங்க நடவடிக்கையில் ஈடுபட அகில இலங்கை தாதியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

கொழும்பு பொது நூலகத்தில் நேற்று இலங்கை தாதியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எச். எம். எஸ்.பி மடிவத்த நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் 12ஆம் திகதி மாபெரும் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாதியர் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 47 ஆயிரம் தாதியர்கள் பாதிக்கப்பட்டுள்ள பிரச்னைகளுக்கு பதில் வழங்காமை, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட தாதியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது, தாதியர்களின் எண்ணிக்கை போன்ற பல பிரச்னைகள் உள்ளன.

60 வயதை எட்டியவுடன் ஓய்வு பெறும் அதிகாரிகள் மிகவும் அனுபவம் கொண்ட செவிலியர்கள். வங்கிக் கடன் தவணை அதிகரிப்பு, மின்கட்டணம் அதிகரிப்பு, நியாயமற்ற சம்பளக் குறைப்பு, இத்தகைய சூழ்நிலையில் பணிபுரியும் தாதியர்களின் பதவி உயர்வு தாமதம் போன்ற காரணங்களால் அவர்களின் துன்பம் மேலும் அதிகரித்து அப்பாவி நோயாளிகள், செவிலியர்களும் அவதிப்படுகின்றனர் - என்றும் தெரிவித்தார்.

## பிரிந்து...

அறிய வருகின்றது.

இந்த சந்திப்பில், சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸநாயக்க, அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, மகிந்த அமரவீர, பாராளுமன்ற உறுப்பினர்களான ஜகத் புஸ்பகுமார, லசந்த அழகியவண்ண ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றனர் என்று அறிய வருகிறது.

இதன்போது, எதிர்கால அரசியல் விடயங்கள் தொடர்பில் நடத்தப்பட்ட இந்தப் பேச்சு இடம்பெற்றதாக அறிய வருகின்றது. (ஐ)

## “தேர்தலுக்கு...

கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது. ஆனால், எங்களால் 580 கோடி ரூபாயே செலவழித்தோம்.

இறுதிச் செலவு மதிப்பிடப்பட்ட செலவை விடக் குறைவாக இருக்கும். ஆரம்பத்தில் ஆயிரத்து 100 கோடி ரூபாயைக் கேட்டோம். பின்னர் 930 கோடி ரூபாய் என்று மதிப்பிட்டோம். ஆனால், வரவு - செலவு திட்டத்தில் ஆயிரம் கோடி ரூபாயே ஒதுக்கப்பட்டது என்றும் ஆணையாளர் கூறினார். (ஐ)

## ஜனாதிபதிக்கும்...

கொள்கைகளை செயல்படுத்த முனைந்ததால் முரண்பாடுகள் தோற்றம் பெற்றன என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் நிறுவுநர் எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்காவின் 124ஆவது நினைவுதினம் நேற்று அவரின் பணிமனையில் நினைவுகூரப்பட்டது. இதில், உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் நிறுவுநர் பண்டாரநாயக்கவின் பிறந்த தினமான ஜனவரி 8 ஆம் திகதி நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டேன்.

நல்லாட்சி அரசாங்கத்தில் பண்டாரநாயக்கவின் கொள்கைகளை எனது அரசியல் கொள்கையுடன் ஒன்றிணைத்து, பண்டாரநாயக்கவின் கொள்கைக்கு மாற்று கொள்கையுடன் பயணித்ததால் முரண்பாடுகள் தோற்றம் பெற்றன. இதனை விடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எனக்கும் நல்லாட்சி அரசாங்கத்தில் தனிப்பட்ட முரண்பாடுகள் ஏதும் காணப்படவில்லை. கொள்கை ரீதியில் பிரச்னைகளே காணப்பட்டன.

பண்டாரநாயக்கவின் கொள்கைகளை தற்போதைய இளம் தலைமுறையினர் அறியாமல் இருப்பது பிரதான பிரச்னையாக உள்ளது. விடேசமாக காலிமுகத்திடல் போராட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் அறிந்தோ, அறியாமலே பண்டாரநாயக்கவின் கொள்கைக்கு அமைய நாட்டை நிர்வகிக்க வேண்டும் என குறிப்பிட்டார்கள். அரசியல் மற்றும் பொருளாதார முறைமை மாற்றம் வேண்டும் என இளைஞர்கள் குறிப்பிட்டார்கள்.

தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு பண்டாரநாயக்கவின் கொள்கையுடன் தீர்வு காண முடியும். 1947 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆட்சி செய்த அரச தலைவர்களில் பண்டாரநாயக்க மற்றும் ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆகியோர் தூரநோக்கு கொள்கையுடையவர்கள் என குறிப்பிட முடியும் - என்றார். (ஐ)

## காணி விடுவிப்பு...

பணிப்புரைகளைச் செயல்படுத்துவதற்கு இராணுவத் தரப்பு தயக்கம் காட்டி வருகின்றது. இராணுவத்தினர் தங்களது நிலைப்பாடுகளிலிருந்து விட்டுக்கொடுக்கின்றார்கள் இல்லை. எனினும், அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தில் சாதகமான நிலைப்பாடுகள் உள்ளன - என்றார்.

## ஆசியாவில்...

இது தொடர்பில், அது வெளியிட்டுள்ள குறிப்பில், 40 மேற்பட்ட நாடுகளை கொண்ட ஆசியாவில் பார்ப்பதற்கு நிறைய இடங்கள் உள்ளன. ஆனால், சிறந்த - அதிகம்பேர் பார்த்திராத இடங்களில் இலங்கையின் யாழ்ப்பாணமும் ஒன்று. பெருமளவிலான சுற்றுலா பயணிகள் இலங்கையின் மலைநாடு, தென்பகுதி கடற்கரைப் பகுதிகளுக்கே அதிகம் செல்கின்றனர்.

கொழும்பிலிருந்து தொலைவிலுள்ள யாழ்ப்பாணம் நாட்டின் தமிழ் பேசும் மக்களின் முதன்மையான தாயகம். கார் அல்லது பேருந்தில் இங்கு பயணிப்பது மதிப்புமிக்கது.

இந்திய, டச்சு காலனித்துவ அடையாளங்கள் மிகுந்து கிடக்கின்றன. இதன் விளைவாக சிக்கலான கலாசாரமும் உள்ளது. யாழ்ப்பாணத்தின் கட்டடக்கலையில் நல்லூர் கந்தசுவாமி கோயில், யாழ்ப்பாணம் பொது நூலகம் இரண்டும் சிறப்பானவை - வித்தியாசமானவை.

வாழைப்பழங்கள், மாம்பழங்களுக்கு பிரபலமானது. மரங்களிலிருந்து பறிக்கப்பட்ட உடனடி பழங்களை பெறமுடியும். சோறு, ஊறுகாய், கறிகள் என மலிவான உணவுகளை ருசிக்க முடியும் என்று அந்தத் தொலைக்காட்சி யாழ்ப்பாணத்தை அறிமுகம் செய்துள்ளது. (ஐ)

## மஹவ...

இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்ளே, போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன, கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்த அபிவிருத்தி செயல்திட்டத்தில் முதல் கட்டமாக 48 கிலோமீற்றர் புகையிரத பாதை திருத்தப்படவுள்ளது. இரண்டாம் கட்டமாக வவுனியா முதல் ஓமந்தை வரையான 13 கிலோமீற்றர் புகையிரத பாதை திருத்தப்படும். இதற்காக 9. 12 கோடி டொலர்களை - சுமாராக இன்றைய மதிப்பில் 3,330 கோடி ரூபாய் செலவிடப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் இலங்கை எதிர்கொண்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் போக்குவரத்து துறை மேம்பாட்டுக்காக இந்தியா வழங்கும் ஒத்துழைப்பு முக்கியமானதாக உள்ளது. அத்துடன், வரவேற்கத்தக்கது. இந்தியாவின் அபிவிருத்தி பணிகள் ஒரு மையத்தை மாத்திரம் வரையறுத்ததாக அமையவில்லை. இலங்கையில் அனைத்து பகுதிகளிலும் இந்திய அரசாங்கத்தின் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பு வரவேற்கத்தக்கது - என்று இதன்போது அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வெறிநோய் பரவக்கூடிய அபாய நிலையில் நாடு!

**2022இல் யாழில் ஐவர் உயிரிழப்பு**

கொழும்பு, ஜன. 09

நாட்டில் இந்த ஆண்டு வெறிநோய் வேகமாக பரவக் கூடும் அபாயம் உள்ளது என்று பொது சுகாதார கால் நடை சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் எல். டி. கித்சிறி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதனிடையே, வெறிநோயால் கடந்த ஆண்டு 27 பேர் உயிரிழந்தனர். யாழ்ப்பாணம், கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் இருந்து தலா ஐந்து இறப்பு கள் பதிவாகின என்றும் அவர் கூறினார்.

மேலும், நாய்களுக்கான வெறிநோய் தடுப்பூசிகள் பற்றாக்குறை காரணமாக இந்த ஆபத்து காணப்படு கிறது.

கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, அம்பாந் தோட்டை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தடுப் பூசிகள் இருப்பு இல்லை. கடந்த ஆண்டு ரேபிஸ் நோயால் 27 பேர் உயிரிழந்தனர்.

பெப்ரவரி மாதத்துக்குப் பிறகு தடுப்பூசிகள் வழங் கப்பட மாட்டாது. யாழ்ப்பாணம், கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் இருந்து தலா ஐந்து இறப்புகள் பதிவாகியுள்ளன. மீதமுள்ளவர்கள் நாட்டின் ஏனைய பகுதிகளை சேர்ந்தவர்கள். நாய் கடித்தால் 95வீதத் தொற்று ஏற்படுகிறது.

இலங்கையில் நாய்க்கடி தொடர்பான மரணங் களுக்கு முக்கிய காரணம் வெறிநோய்க்கு எதிரான நாய்களுக்கு தடுப்பூசி போடாததே ஆகும்.

சுமார் 70 இலட்சம் நாய்கள் உள்ளன. ஆண்டுக்கு சுமார் 15 இலட்சம் நாய்களுக்கு மட்டுமே தடுப்பூசி போடப்படுகிறது. எதிர்வரும் பெப்ரவரி வரை தடுப்பூசி இயக்கங்கள் பணிகளை மேற்கொள்ளும். ஆனால், தடுப் பூசி பற்றாக்குறை தொடர்ந்தால் பெப்ரவரி மாதத்துக் குப் பிறகு தடுப்பூசிகள் வழங்கப்பட மாட்டாது.

இதேவேளை 2022 ஆம் ஆண்டில் 10 இலட்சம் நாய்களுக்கு வெறிநோய்க்க எதிராக தடுப்பூசி போட் டது மற்றும் 40 ஆயிரம் பெண் நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டது. நாய்க்கடியால் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவோருக்கான தடுப்பூசிகளுக்கு பற்றாக்குறை இல்லை - என்றும் அவர் கூறினார். (ஐ)

# அமைச்சர் டக்ளஸின் செயலுக்கு மீனவர் அமைப்பு கடும்கண்டனம்!

**யாழ்ப்பாணம், ஜன. 09**

**கடலட்டைப் பண்ணைக்கு எதிராக கிராஞ்சியில் 100 நாட்களுக்கு மேலாக மக்கள் போராடி வரும் நிலையில், போராட்ட இடத்தின் முன்பாகவே 83 மீனவர்களுக்கு கடலட்டை பண்ணைக்கு அனுமதி வழங்கியமை வெறுப்புக்கு உரியது என்று தேசிய மீனவ ஒத்து ழைப்பு இயக்கத்தின் வட, கிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாஸ் தெரிவித்தார்.**




தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழு கிராஞ்சி கடலட்டை பண்ணைகள் தொடர்பாக நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பி லேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

வட பகுதியில் தற்போதுள்ள முக்கிய பிரச்னை கட லட்டைப் பண்ணை உருவாக்கம். குறிப்பாக, கிளி நொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் தான்தோற்றித்தன மாக உருவாக்கப்படுவதால் அவர்களின் தொழில் மற்றும் தொழில்சார் விடயங்கள் பாதிப்படைகின்றது.

கிராஞ்சியில் 100 நாட்களுக்கு மேலாக மக்கள் போராடி வரும் நிலையில் போராட்ட இடத்திற்கு முன்னாலே 83 மீனவர்களுக்கு கடலட்டை பண்ணைக்கு அனுமதி வழங்கிய நிகழ்வானது கண்டிக்கத்தக்கது.

குறிப்பாக அரசாங்கத்தின் முக்கிய அமைச்சராக இருப்பவர் இவ்வாறு செயல்படுவது வெறுப்புக்குரிய தாகும். பூநகரி பிரதேச செயளாளர் எவ்வித கடலட் டைப் பண்ணைக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை எனக் கூறிய போதும், அமைச்சர் எவ்வாறு அனுமதி வழங்கினார் என்ற விடயம் கேள்விக்கு உரியது.

இதனால் சிறு மீன்பிடியாளர்கள் பாதிக்கப்படுகின் றனர். இவ்வாறான செயல்பாடுகளால் கரையோரத்தில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் தொழில் செய்ய ஆழ்கடலுக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது.

அமைச்சுப் பதவிக்கு வந்ததும் இந்திய மீனவர் பிரச்னை, சட்டவிரோத மீன்பிடிக்கு தீர்வு என கூறிய அமைச்சர் தற்சமயம் சிறு மீனவர்களுக்கு பாதிப்பேற் படுத்தும் விடயத்துக்கு ஆதரவளிப்பது வேண்டத்தகாத விடயமாகும்.

இலங்கையிலும் சட்டவிரோத மீன்பிடி அதிகரித்து வருகின்றது, குறிப்பாக முல்லைத்தீவுப் பகுதிகளில் வழ மையாக கைகளால் கரைவலைகளை இழுக்கும் செயல் பாட்டுக்கு மாறாக டிராக்டரைப் பயன்படுத்தி கரை வலை இழுக்கும் சட்டவிரோத செயல்பாடுகள் அதி கரித்துள்ளன.

இதனுடன் மயிலிட்டி துறைமுகத்தின் பெருமாபா லான பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ளது. ஆகவே, வளமான பிரதேசங்கள் மக்கள் உரிய பயன டையாத நிலை காணப்படும் நிலை தொடர்ந்த வண்ண முள்ளது.

இவ்வாறு தீர்க்கப்படாத மக்கள்சார் பெரும் பிரச் னைகள் காணப்படும் நிலையில் அரசாங்கத்தில் பொறுப் புள்ள அமைச்சராக அங்கம் வகித்துக்கொண்டு மக்களின் நலனில் அக்கறையின்றி தொடர்ந்தும் செயல்பட்டு வருவது கண்டிக்கத்தக்க விடயமாகும் - என்றார். (ஐ)

# மின் கட்டண அதிகரிப்பு இறுதி தீர்மானம் இன்று?

கொழும்பு, ஜன. 09

மீண்டும் மின்சார கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான இறுதித் தீர்மானம் இன்று நடைபெற வுள்ள அமைச்சரவை கூட்டத்தில் எட்டப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடை பெற்ற கடந்த அமைச்சரவை கூட்டத்தில் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகரவால் மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு உள்ளிட்ட பல தரப்பினர் எதிர்ப்பை வெளியிட்டிருந்த பின்னணியில் இந்த யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட் டது.

எனினும், அன்றைய தினம் மின்கட்டணத்தை அதி கரிப்பதற்கான யோசனை இன்று நடைபெறவுள்ள அமைச்சரவை கூட்டம் வரை ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தாய்லாந்துடன் வர்த்தக ஒப்பந்தம் 3ஆம் சுற்று பேச்சு இன்றும் நாளையும்!

கொழும்பு, ஜன. 09

இலங்கை - தாய்லாந்து இடை யிலான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான மூன்றாவது சுற்றுப் பேச்சு இன்றும் நாளையும் கொழும்பில் நடைபெற வுள்ளது.

இந்தப் பேச்சில் பங்கேற்பதற் காக தாய்லாந்து அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழு நேற்று ஞாயிற் றுக்கிழமை காலை நாட்டை வந்த டைந்தது.

தாய்லாந்தின் வர்த்தக பேச்சு திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அவுரமோன் சுப்தாவிதும் தலைமை யிலான இந்தக் குழுவில் 26 பிரதி நிதிகள் உள்ளடங்குகின்றனர்.

பண்ட வர்த்தகம், சேவை வர்த்தகம், முதலீடு, மூல விதிகள், சுங்க ஒத்துழைப்பு, வர்த்தக வசதி மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஆகிய துறைகள் தொடர்பாக இதன் போது விசேட கவனம் செலுத்தப் படவுள்ளது.

2021ஆம் ஆண்டில், இலங்கை யிலிருந்து தாய்லாந்துக்கான ஏற்று மதி 59 மில்லியன் டொலர்களாக வும், தாய்லாந்தில் இருந்து இலங்கைக்கான இறக்குமதிகள் 355 மில்லியன் டொலர்களாகவும் இருந்தன.

தாய்லாந்துக்கு சாதகமான வர்த் தக சூழ்நிலை நிலவும் பின்னணியில் இந்தப் பேச்சுகள் தொடங்கப்படு



வதோடு, தாய்லாந்துக்கான பிர வேசம் மூலம் நமது ஏற்றுமதிகளை தாய்லாந்து சந்தைக்கு மட்டுமின்றி மற்ற ஆசியான் சந்தைகளுக்கும் எமது ஏற்றுமதிகளுக்கான பிரவே சத்தை மேம்படுத்துவது மற்றும் தற்போதுள்ள வர்த்தகத்துக்கான வரி அல்லாத வர்த்தகத் தடைகளை குறைப்பது என்பன இந்தப் பேச்சுகளின் நோக்கமாகும்.

தாய்லாந்து சந்தையில் இலங் கையின் இரத்தின கல், தேயிலை (கறுப்பு) போன்றவற்றை ஏற்றுமதி செய்வதற்கான பெரும் சாத்தியக் கூறுகள் காணப்படுவதோடு, இந்தப் பேச்சுகளின் வெற்றியின் மூலம் இரு நாடுகளுக்கும் இடை யில் தற்போதுள்ள வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்கும் புதிய துறை களில் இருக்கும் வாய்ப்புகளை செயல்படுத்துவதற்கும் வழிகள் திறக்கப்படும்.

ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் இயங்கும் தேசிய வர்த்தக பேச்சு குழு, இலங்கை சார்பாக பங்கேற்ப தோடு, வெளிவிவகார அமைச்சு, வர்த்தகம் மற்றும் உணவுப் பாது காப்பு அமைச்சு, நிதி அமைச்சின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு விவகாரங்கள் திணைக்களம் மற்றும் வர்த்தகத் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்க வுள்ளனர். (ஐ)

# காண்காணிப்பு அமைப்புகளை சந்திக்கிறது தேர்தல்கள் குழு!

கொழும்பு, ஜன. 09

தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் கண் காணிப்பு அமைப்புகள் இடையே எதிர்வரும் புதன் கிழமை சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது.

தேர்தல் அறிவிப்புக்குப் பின்னர் இடம்பெறும் முதலாவது சந்திப்பு இதுவாகும் என பவ்ரல் அமைப் பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டி யாரச்சி தெரிவித்தார்.

தேர்தல் சட்டங்கள், தேர்தல் இடம்பெறும் விதம் மற்றும் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்படவுள்ளதாக அவர் குறிப்பிட டார்.

இதனிடையே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு எதிராக எதிர்வரும் சில தினங்களுக் குள் நீதிமன்ற நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து செயல்பாடுகளையும் செல்லுபடியற்றதாக்குமாறு எழுத்தாணை கட்டளையை பிறப்பிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் இடையீட்டு மனுதாரராக கண்காணிப்பு அமைப்பு முன்னிலையாகவுள்ளதாக பவ் ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்தார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.00 மணி : இயற்கை வழி
7.15 மணி : கதைவழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.00 மணி : தொடர் நாடகம்
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்- மறுஒளிபரப்பு

**பகல்**


12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : சினிமா சினிமா
6.00 மணி : இவினிங் பிளாஸ்ரர்
6.30 மணி : குறுந்திரை

**இரவு**

7.00 மணி : நலந்தானா



7.30 மணி: வழிப்போக்கன்




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு